முகூர்த்த பட்டு புடைவைக்கு
சகல விதமான
காஞ்சிபுரம் சேலை
பட்டு வேட்டி கூறை சாறி
பனாரிஸ் சேலைகளுக்கும்
சிறந்த ஒரே இடம்
கோபிகா
ஆடை அகம்
4, சிறப்பு அங்காடி,
உட்புறம்,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a NewsPaper

# உதயன்

விலை ரூபா 5-00

ராகமாலிகா
என இயங்கி வந்த
எமது ஸ்தாபனம்
கோபிகா
ஆடை அகம்
என பெயர்
மாற்றப்பட்டுள்ளது
4, சிறப்பு அங்காடி,
உட்புறம்,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 12 வெள்ளிக்கிழமை (24 – 02 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 92

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு புலிகளுடன் மட்டுமே அரசு பேச வேண்டும்

## தொண்டா தெரிவிப்பு

லண்டன், பெப்ரவரி 24

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமே ஸ்ரீலங்கா அரசு பேச்சு நடத்த வேண்டும். ஏனைய தமிழ்க் கட்சிகள், தமிழ்ப் போராளிகளுடன் அரசு பேச முயன்றால் நிலைமை விபரீதமாகக் கூடும்.

—இவ்வாறு தெரிவித்தார் ஸ்ரீலங்கா அரசின் அமைச்சரான சௌமியமூர்த்தி தொண்டமான்.

பி. பி. ஸி யின் தமிழோசைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அப்பேட்டியின் முக்கிய பகுதிகள் வருமாறு:

கேள்வி: புதிய அரசாங்கத்தின் அமைதி முயற்சிகள் பற்றி மூத்த அமைச்சரான தங்களுடைய கருத்து என்ன?

பதில்: முதல்தடவையாக பேச்சுக்கான கோரிக்கையை தேர்தலிலே— துணிச்சலாக— மக்கள் முன்வைத்து, பேச்சு நடத்துவதற்கு மக்கள் ஆதரவைப் பெற்று, அந்தப் பேச்சை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் அது இன்னும் ஆரம்பக் கட்டத்திலேயே இருக்கின்றது

அடிப்படைப் பிரச்சினை குறித்து பேசும் நிலைக்கு அவர்கள் வரவே இல்லை.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். இலங்கை வங்கி கணனி மயமாகும்

யாழ்ப்பாணம், பெப். 24

இலங்கை வங்கியின் யாழ். பிராந்திய மேல்தரக்கிளை கணனி (கொம்பியூட்டர்) மயப்படுத்தப்படவுள்ளது. இதற்கான அனுமதியை இலங்கை வங்கியின் தலைவர் திரு ராஜன் ஆசிர்வாதம் வழங்கியுள்ளார்.

கணனி மயப்படுத்தலுக்கான ஆரம்ப வேலைகள் இன்னும் ஒரு மாத காலத்துக்குள் ஆரம்பிக்கப்படும்.

இதேவேளை ஏனைய இலங்கை வங்கிக் கிளைகளில் பாவனையில் உள்ள கணிப்பீட்டு இயந்திரங்களுக்குப் பதிலாக புதிய இயந்திரங்களும் அனுப்பி வைக்கப்பட இருக்கின்றது.

இலங்கை வங்கியின் யாழ். மேல்தரக் கிளை கணனி முறைக்கு கொண்டு வரப்பட்டதும் இங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டு அவர்கள் யாழ் மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கியின் ஏனைய கிளைகளுக்கு மாற்றப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தென்பகுதியில் இலங்கை வங்கியின் கிளைகள் பலவற்றில் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளமையும், வவுனியாவில் இவ் வேலைகள் தற்போது நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கவை.

## யாழ் மாவட்டத்துக்கு இனி 5 கப்பல்கள் சேவை

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான உணவு, மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துவருவதற்கென இவ்வாண்டு 5 கப்பல்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளன.

யாழ். மாவட்டத்தில் வீதிகளைப் புனரமைப்பதற்கென பெருந்தெருக்கள் அதிகார சபைக்கும், பெருந்தெருக்கள் அபிவிருத்திச் சபைக்கும் தேவையான தார் வகைகளையும், மற்றும் பசளைகள் என்பனவற்றை எடுத்து வருவதற்கென இவற்றில் ஒரு கப்பல் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

இவ்வாறு யாழ் அரச அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை –

உணவுப் பொருள்கள் எடுத்துவரப்படும் இரண்டு கப்பல்களுக்கான கப்பல் கட்டணங்களை பொறுப்பேற்க அரசு இணங்கியுள்ளது, என்றும்—

முன்னர் அனுப்பிய உணவுப்பொருள்களின் தொகையிலும் பார்க்க இவ்வருடம் கூடுதலான உணவுப்பொருள்கள் அனுப்ப இருப்பதை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் பேச்சுகள் முதலாம் திகதி நடக்கும்

கொழும்பு, பெப். 24

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையேயான நான்காவது சுற்றுப் பேச்சு, எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது

பேச்சுக்களை எதிர்வரும் முதலாம் திகதி நடத்துவதற்கு இணக்கம் தெரிவித்து அரசு, விடுதலைப் புலிகளுக்கு கடிதம் அனுப்பி வைத்திருப்பதாக 'லங்கா தீப' நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, மார்ச் முதலாம் திகதி நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையை உறுதிப்படுத்தும் கடிதத்தை இன்று வெள்ளிக்கிழமை விடுதலைப் புலிகள், அரசுக்கு அனுப்பி வைப்பார்கள் என்று வட பகுதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என்று செய்தி ஏஜென்ஸிகள் குறிப்பிட்டன.

[ஒ-2-6]

## மே முதலாம் திகதிக்கு முன்னர் உணவுச் சாலைகளுக்கு உரிமம் பெற வேண்டும்

யாழ்ப்பாணம், பெப் 24

சாப்பாட்டுக் கடைகள் கன்ரீன்கள், உணவுச்சாலைகள் நடத்துவோர் எதிர்வரும் மே முதலாம் திகதிக்கு முன்னர் அதற்கான உரிமத்தை (லைசென்ஸை) பெற்றுக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருக்கிறது

தமிழீழ உணவுச் சட்டம் தமிழீழ தேசியத் தலைவரின் ஒப்புதலுடன் நடைமுறைக்கு வருவதை அடுத்தே மேற்படி உரிமம் பெறவேண்டிய ஒழுங்கு விதியும் நடைமுறைக்கு வருகின்றது.

உணவுதயாரித்தல், பேணிக்காத்தல், பொதியாக்குதல் களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்தல், ஆகிய தொழில்களில் ஈடுபடுவோர் தமிழீழ முதன்மை உணவு அலுவலரிடமிருந்து இந்த ஆண்டுக்கான

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சுப்பிரமணியம்சுவாமியுடன் தந்தை செல்வாவின் மகன்!

### அடிக்கடி காணப்படுகிறாராம்

சென்னை, பெப். 24

தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் மகனும் "புரொடெக்" என்ற ஈழத் தமிழர் அமைப்பின் தலைவருமான சந்திரஹாசன் இப்போது அடிக்கடி ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமியுடன் காணப்படுவதாக "ஜூனியர் விகடன்" பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான கொள்கையுடைய இவர்கள் இருவரும் மிகவும் நெருக்கமாகி விட்டார்கள் என்றும்—

சுப்பிரமணிய சுவாமி நடத்தும் பத்திரிகையாளர் மாநாடுகளில் எல்லாம் சந்திரஹாசனும் தவறாது இருப்பார் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## சந்திரிகாவின் முறைப்பாட்டின் பேரில் பத்திரிகை ஆசிரியர் விசாரணையில்!

### நாலாம் மாடியில் 3 மணி நேரம் நடந்தது

கொழும்பு. பெப். 24

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க செய்த முறைப்பாட்டின்பேரில் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் பிரதம ஆசிரியரான சிங்கரட்ணதுங்க நேற்று முன்தினம் சுமார் மூன்று மணி நேரம் இரகசியப் பொலீஸாரினால் விசாரணை செய்யப்பட்டார்.

இது குறித்து ஜனாதிபதியின் செயலாளர் குசும் சிறி பாலபட்டபெண்டி தெரிவித்திருப்பதாவது:-

ஒரு பொய்யான செய்தியை வெளியிடுவதன் மூலம் தமக்கு அபகீர்த்தியையும் அவமானத்தையும் ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படும் போது அதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இந்த நாட்டில் உள்ள சகல பிரஜைக்கும் உரிமை உண்டு.

இந்த வகையில் — ஜனாதிபதி சந்திரிகாவும் தாமும் இந்த நாட்டின் சாதாரண ஒரு பிரஜை என்ற முறையில் தமது உரிமையைப் பாதுகாப்பதற்காக —

தமக்கு எதிராகப் பொய்யான தகவல்களை வெளியிட்டு தமக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முயற்சி எடுக்கப்பட்டதாக பொலீஸாருக்கு வாக்குமூலம் ஒன்றை அளித்தார்.

அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சாதாரண சட்டங்களின் கீழான —சாதாரண நடவடிக்கைகளை — பொலீஸார் எடுத்துள்ளனர்; விசாரணை நடத்துகின்றனர்.

சம்பந்தப்பட்ட பத்திரிகை ஆசிரியர் பொலீஸாரால் நான்காம் மாடிக்குக் கொண்டு செல்லப்பட்டதாக் கூறப்படுகின்றது.

ஒரு காலத்தில் 4 ஆம் மாடி பயங்கர இடமாகக் கருதப்பட்டது. ஆனால் இப்போது

[6 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்திமுரளி



அரசாங்கங்கள் மாறி, மாறி வந்தாலும், நாலாம் மாடி இலி மாறாது போலை...!

## யாழ். மாநகரப் பகுதிக்கு மின்சாரம் வழங்கும் திட்டம் பிசுபிசுக்கும் நிலை!

### ஜெனரேற்றர்களை கொண்டு வருவதில் சிக்கல்

கொழும்பு, பெப். 24

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் நாளொன்றுக்கு பத்து மணி நேரம் மின்சார விநியோகம் செய்வதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ள போதிலும்—

அதற்கு வேண்டிய "ஜெனரேற்றர்"களை கொண்டு சென்று சேர்ப்பதற்கு இலகு வழிப்பாதை இல்லாததால்—

அத்திட்டத்தை, நடைமுறைப்படுத்த முடியாத நிலை தோன்றியிருக்கிறது.

யாழ். மாநகர சபைப் பகுதிக்குப் பத்து பாரிய ஜெனரேற்றர்களைக் கொழும்பில் இருந்து அனுப்பி, நாளாந்தம் பத்து மணி நேரம் மின்சாரம் வழங்கும் திட்டம் ஒன்று கொழும்பில் வகுக்கப்பட்டது.

இதற்காக 625 கே. வி. வலுக்கொண்ட இரண்டு ஜெனரேற்றர்களையும், 500 கே. வி. வலுக்கொண்ட ஆறு ஜெனரேற்றர்களையும், 300 கே. வி.வலுவுடைய இரண்டு ஜெனரேற்றர்களையும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதற்கும்—

அந்த ஜெனரேற்றர்களை இயக்குவதற்கு நாளொன்றுக்குத் தேவைப்படும் 5,100 லீற்றர் டீசலை இங்கே அனுப்புவதற்கும்—

அரசு ஏற்பாடுகளை செய்துள்ளது.

ஆனால் பெரிய ஜெனரேற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு

கொழும்பு பெப் 24

பதவியிலிருந்த காலத்தில் மோசடி மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்டதாக ஓய்வு பெற்ற ஏழுபடை அதிகாரிகள் மீது குற்றஞ்சாட்டப்படவிருப்பதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

(உ-எ)

தமிழர்களை திருப்பி அனுப்புதல்:

## விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை நோர்வே அரசுக்கு தெரிவிப்போம்

### யாழ். வந்துள்ள அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், பெப் 24

உறுதியான அரசியல் தீர்வு ஏற்படும்வரை நோர்வேயில் உள்ள ஈழத் தமிழர்களை அங்கிருந்து திரும்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று விடுதலைப் புலிகள் விடுத்த கோரிக்கைக்கு நாம் இணக்கம் தெரிவிக்கவில்லை.

ஆனால் நோர்வேயிலிருந்து தமிழர்களை திருப்பி அனுப்புவது சம்பந்தமான விவாகாரத்தில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை எமது அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்துவோம்.

நோர்வே நீதி அமைச்சின் ஆலோசகர் திரு. ஜெயிர் ஆஜ் நீர்பை உதயனுக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 16 ஆம் திகதி உதயனில் "நோர்வே அதிகாரிகள் புலிகளுடன் பேச்சு" என்ற தலைப்பில் வெளியான செய்தி குறித்து கையளித்த கடிதம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 15 ஆம் திகதி நோர்வே அதிகாரிகளுக்கும் விடுதலைப் புலிகள் தலைவர்களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களில்—

உறுதியான அரசியல் தீர்வு ஏற்படும்வரை நோர்வேயில் உள்ள ஈழத்தமிழர்களை அங்கிருந்து திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று விடுத

[ ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். மாவட்ட மீனவருக்கு 15ஆயிரம் ரூபா கடனுதவி

### இலங்கை வங்கி வழங்கும்

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு இலங்கை வங்கி மீண்டும் கடனுதவிகளை வழங்கவுள்ளது.

இதன்படி 15 ஆயிரம் ரூபா கடனை இருமீனவர்கள்பிணையாளியாக இருப்பதன் மூலம் வழங்கப்படும்.

இக்கடன் தொகைக்கு வருடம் ஒன்றுக்கு 21 வீத வட்டி அறவிடப்படும் என்றும் இக்கடனை 25 மாதத்துக்குள் மீள அளிக்கக்கூடியதாக இருக்கும் என்றும் யாழ். மாவட்ட பிராந்திய பொது முகாமையாளர் தெரிவித்தார்

இக்கடனைக் கொண்டு மீனவர்கள் மீன் பிடி உபகரணங்கள் மற்றும் வள்ளங்களை திருத்தியமைக்க முடியும் என்றும் —

விரைவில் இக்கடன்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-7-4)

## அரசின் சமாதான முயற்சிகளுக்கு அரச, எதிரணி எம்.பிக்கள் வரவேற்பு

### நேற்று நாடாளுமன்றில் உரை

கொழும்பு, பெப். 24

அரசின் சமாதான முயற்சிகளை அரச, எதிர்தரப்பு எம் பிக்கள் பலரும் வரவேற்றுள்ளனர்.

நேற்று நாடாளுமன்றத்தில் வரவு — செலவுத்திட்ட பாதுகாப்புத்துறைக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர்கள் சமாதான முயற்சிகளுக்கு ஏகோபித்த ஆதரவைத் தெரிவித்தனர்.

முன்னாள் அமைச்சரும் ஐ. தே. கவின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவருமான பி. தயாரத்ன தமது உரையில்—

நாட்டில் 99 வீதமானோர் சமாதான முயற்சிகளை வரவேற்பதாகக் கூறினார்.

தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு 1987 இல் மாகாணசபை முறை கொண்டுவரப்பட்டது. ஆனால் அது தமிழ்மக்களை திருப்திப்படுத்தவில்லை.

நாமும் சமாதானத்தை விரும்புகிறோம். அரசின் முயற்சிகள் வரவேற்கத்தக்கன.

சிங்கள மக்கள் பாதிக்காத வகையில் இனப்பிரச்சினைக்

( 6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

### யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

*சலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.*

மேற்படி சங்கத்தின் பிரதேச மன்ற உறுப்பினர்களுக்கு, ஈழநாதம், உதயன் ஆகிய பத்திரிகைகளில் 22 - 02 - 95 இல் வெளியான அறிவித்தலின் படியும் 15 - 02 - 95 இல் தபால் மூலம் உறுப்பினருக்கு அனுப்பிய அறிவித்தல்களின்படியும் நடைபெறவிருந்த மேற்படி சங்கத்தின் பின்வரும் பிரதேச மன்றங்களின் பொதுக்கூட்டங்கள் 22 - 02 - 95 ஆம் திகதிய சங்க பணிப்பாளர் சபைக்கூட்டத் தீர்மானப்படி தவிர்க்க முடியாத காரணங்களினால் பின்போடப்பட்டுள்ளன என்பதை தயவு செய்து அறிவிக்கின்றேன். இதற்கான கூட்ட அறிவித்தல்கள் திகதி நிர்ணயிக்கப்பட்டதும் உரிய வேளையில் அறிவிக்கப்படும். ஏனைய பிரதேச மன்றங்களின் பொதுக்கூட்டங்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி நடைபெறும்.

| பிரதேச மன்றம் | கூட்டம் நடைபெற இருந்த திகதி |
|---|---|
| 1. நல்லூர் பிரதேச மன்றம் | 25 - 2 - 95 |
| 2. வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச மன்றம் | 25 - 2 - 95 |
| 3. வலிகாமம் தெற்கு (உடுவில்) பிரதேச மன்றம் | 26 - 2 - 95 |

உறுப்பினர்களுக்கு இதனால் ஏற்பட்ட சிரமங்களுக்கு மனம் வருந்துகிறோம்.

— கௌரவ செயலாளர்

(சி/667)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை- மானிப்பாய்
பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான

## அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள் வசிப்பவர்களிடமிருந்து கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் இப்பிரதேசசபை தலைமைச் செயலகத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் பூர்த்திசெய்யப்பட்டு "விசேட ஆணையாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 1995 - 3 - 21ஆம் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவு திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

**2. பதவிகளும் தகைமைகளும்**

**[அ] நூலக சேவகர் பதவி:**
க. பொ. த. [சாதாரண தர] பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட இரு அமர்வுகளுக்கு மேற்படாத ஆறு பாடங்களில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

**[ஆ] பதில் நூலக சேவகர் பதவி:**
க. பொ. த. [சாதாரண தர] பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட இரு அமர்வுகளுக்கு மேற்படாத ஆறு பாடங்களில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

**[இ] பதில் நூலக தொழிலாளி பதவி:**
8ஆம் வகுப்பில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

**[ஈ] பதில் சுகாதார தொழிலாளி:**
5ஆம் வகுப்பில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

**3. வயதெல்லை**
மேற்கூறிய நான்கு பதவிகளுக்கும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**4. சம்பள விகிதம்**
சம்பளங்களும், படிகளும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வழங்கப்படும்.

5. விண்ணப்பப்பத்திரத்துடன் பிறப்புச்சான்றிதழ், கல்வித்தகைமைச் சான்றிதழ் வதிவிடச் சான்றிதழ், நற்சாட்சிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றில் போட்டோ பிரதிகள் தவறாது இணைத்து அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

6. மேலதிக விவரங்களை இப்பிரதேசசபையின் தலைமைச் செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

து. வைத்திலிங்கம்
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு
பிரதேசசபை,
மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு
பிரதேசசபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய் 1995-2-22

[சி-387]

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சங்கரப்பிள்ளை அமிர்தவல்லி

திருமதி சங்கரப்பிள்ளை அமிர்தவல்லி அவர்கள் (23-02-1995) வியாழக்கிழமையன்று அகால மரணம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரம் அடைகின்றோம். அன்னாரைப் பிரிந்து வாடும் அவரது பிள்ளைகளுக்கும், மைத்துனியான எமது பாடசாலை ஆசிரியை செல்வி க. வைரமுத்து அவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலய
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(35354)

ஸ்ரீராம ஜெயம்
பொன்னாலை அருள்மிகு
ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
நவகுண்ட பக்ஷசகஸ்ர சங்க (1008)
கலச சங்காபிஷேகம்

## திவ்ய பகவத் கீதை
# ஹோமப் பெருவிழா

திருவருள் சிறப்புக்கள் மலிந்து விளங்கும் பொன்னாலைப் பகுதியில் கூர்மாவதார மூர்த்தியாக வீற்றிருக்கும் ஸ்ரீதேவி பூமிதேவி சமேத ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திருநோக்கில் நிகழும் பவஆண்டு மாசி மாதம் **24-02-95** ஆம் திகதி தொடக்கம் **27-02-95**ஆம் திகதி வரை அபிஷேகமும், பகவத்கீதா ஹோமமும் நிகழ கண்ணன் அருள் நிறையப் பெற்றுள்ளது

மேற்படி பெரு விழாவுக்கான கிரியைகள் யாவும்
பிரதம குரு முத்தமிழ் குருமணி
சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்
[சுன்னாகம் கதிரைமலை சிவன்கோயில் தேவஸ்தானம்]
அவர்கள் தலைமையில்
அருள்மிக்க பிரபல சிவாச்சாரியார்களால்
செய்ய திருவருள் கிட்டியுள்ளது.

### நிகழ்ச்சி நிரல்

காலம்: **1 ஆம் நாள் 24-02-1995**
வெள்ளிக்கிழமை

காலை: அனுக்ஞை கணபதி ஹோமம்
மாலை: நவக்கிரக ஹோமம், வாஸ்துசாந்தி

**2 ஆம் நாள் 25-02-1995**
சனிக்கிழமை

காலை: **8-00** மணி சங்குஸ்தானம்
மாலை: **3-00** மணி
கடஸ்தாபனம், யாகபூசை, நவக்கினி வழிபாடு சுதர்சன ஹோமம்

**6-00** மணி
மங்கள இசை — கோயில் மேளம்

**6-30** மணி
ஆசியுரை பிரபல சிவாச்சாரியார்கள்

**7-00 — 8-15**
தெய்வீகப் பேருரை: "நலம் தரும் சொல்"
நிகழ்த்துபவர்:
தமிழருவி த. சிவகுமாரன்
(காரைநகர், கம்பன் கழக அமைப்பாளர், ஆசிரியர் யாழ். இந்துக்கல்லூரி)

**3 ஆம் நாள் 26-02-1995**
ஞாயிற்றுக்கிழமை

காலை **8-00** மணி
பகவத்கீதை பாராயண ஹோமம்

**12-00** மணி அருளுரை
சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

வாழ்த்துரை
திரு. க. பொன்னம்பலம் அவர்கள்
[யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்]
திருமதி விஜயலட்சுமி கேதீஸ்வரன்
[உதவி உணவு கட்டுப்பாட்டு ஆணையாளர்]
திரு. து. வைத்திலிங்கம்
(வலி. தென் மேற்கு பிரதேச செயலர்)

சொற்பொழிவு:
"நம்பினார் கெடுவதில்லை"
சைவப் புலவர் சு. செல்வத்துரை அவர்கள்
[இளவாலை மெய்கண்டான் அதிபர்]

மாலை **3-00** மணி:
விசேட திரவிய ஹோமம், சுத்த ஹோமம்
ஆசியுரை: தேவஸ்தானக் குருக்கள்

**5-00** மணி:
ஈழத்து தலைசிறந்த பிரபல்ய நாதஸ்வர தவில் வித்துவான்களின்:
விசேட மேளக்கச்சேரி

**7-00** மணி:
தெய்வீகப் பேருரை: "கீதோபதேசம்"
தமிழருவி திரு. த. சிவகுமாரன்
[காரைநகர், அமைப்பாளர் கம்பன் கழகம்]

**8-00** மணி
இன்னிசைக் கச்சேரி:
பாட்டு:
சங்கீத பூஷணம் திரு. சு. கணபதிப்பிள்ளை
சங்கீத பூஷணம் திரு. வ. உருத்திரன்
இசைமணி செல்வி சச்சிதானந்தம் சாரதா
வயலின்: திரு. எஸ் வெங்கடேஸ்வர சர்மா
மிருதங்கம்: திரு. வசந்தன்
கெஞ்சிரா: திரு. எம். சிதம்பரநாதன்
கடம்: திரு. நிதர்சன்

தமிழருவி த. சிவகுமாரன் அவர்களை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்
உயர்திரு க. பொன்னம்பலம்
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

**9-00** மணி விசேட மிருதங்க இசை
போராளி கலைஞர்கள்
திரு. வசந்தன்
திரு. தினேஸ்
திரு. நிதர்சன்

**4 ஆம் நாள் 27-02-1995**
திங்கட்கிழமை

காலை: **7-00** மணி
மஹா பூர்ணகுதி, தீபாராதனை கும்பம் வீதி பிரதட்சணம் அபிசேகம் ஆசீர்வாதம், சுவாமி வீதியுலா வருதல், ஈழத்து தலைசிறந்த தவில், நாதஸ்வர வித்துவான்களின் விசேட மேளக்கச்சேரிகள் இடம் பெறும்.

மேற்படி நடைபெறும் விழாக்களுக்கு அடியார்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிப்பதுடன் கண்ணன் அருளைப் பெற்று உய்யுமாறு அன்பாக வேண்டுகிறோம்.

குறிப்பு:
1. அபிஷேகத்துக்குரிய பால், இளநீர், பழவகைகள் பூக்கள், நிதியுதவி செய்ய விரும்புபவர்கள் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட காரியாலயத்தில் வழங்குமாறு வேண்டுகின்றோம்.
2. கண்ணன் அடியார்கள் நலன் கருதி விசேட பஸ் போக்குவரத்து ஒழுங்குகளும் கோயிலடி வரை செய்யப்பட்டுள்ளன.
26 - 02 - 95 ஆம் திகதி அன்று காலை **7 - 00** மணிக்கு பொன்னாலை விநாயகர் ஆலயத்தில் இருந்து குடை, கொடி, ஆலவட்டத்துடன் குருக்கள்மார், அடியார்கள் ஆலயத்திற்கு வருகை.
3. யாகசாலை, பந்தல் அலங்காரம்:
ஞா. கந்தையா வரததாசன்
மாவிட்டபுரம், மல்லாகம்

ஒலி: சித்தன்கேணி கண்ணன் சவுண்ட்

இங்ஙனம்;
காரைநகர் மக்கள் சார்பில்
விழாக்குழு

வாழ்த்துவோர்:
**கணேசன் பட்டுச்சாலை**
201, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
[35353]

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

நடத்தும்

### ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து
பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*கல்வித் தகைமை:*
ஜி. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது சுயவிவரத்துடன் **02-03 95** அன்று காலை 9-00 மணிக்கு 106, 4 ஆம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் சமுகம் தரவும்.

(சி-670)

## நடுக்கட்ட பொருள்கள் பகிரங்க ஏலவிற்பனை

### தமிழீழ மாவட்ட நீதிமன்று பருத்தித்துறை

இந்நீதிமன்றில் வீட்டுத் தளபாடங்கள், துவிச்சக்கர வண்டி, இரண்டு ஆட்டுக்கடா என்பன நடுக்கட்டப்பட்டுள்ளன. குறித்த வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன் தீர்ப்பில் சொல்லப்பட்ட பணத்தைச் செலுத்தி பொருள்களை மீட்காவிடில் சனி அன்று அதாவது 25-02-95 காலை 9-00 மணிக்கு மன்றின் முன்றிலில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

மன்றின் கட்டளைப்படி
ர. பாலசரஸ்வதி
பதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
பருத்தித்துறை

(சி-672)

## காணாமற்போனவர்கள்

1988 சனவரி மாதம் 1ஆம் திகதிக்கு பின்னர் வட. கிழக்கு மாகாணங்களில் அகற்றப்பட்ட அல்லது காணாமற்போன ஆட்களைப் பற்றி விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அத்தகைய சம்பவங்கள் பற்றிய முறைப்பாட்டை 1995 பெப்ரவரி 14ஆம் திகதிவரை அனுப்பி வைக்கும்படி கேட்டிருந்தது

இவ் விவரங்களை சமர்ப்பிக்கும் திகதியை மேலும் ஒரு மாதத்தால் நீடிப்பதென்று மேற்படி ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

**ஆகையால் மேற்படி விவரங்களை 1995 மார்ச் 14ஆம் திகதிவரை ஆணைக்குழு ஏற்றுக் கொள்ளும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.**

எஸ். சி. மாணிக்கவாசகர்,
செயலாளர்,
ஆணைக்குழு,

வட-கிழக்கு மாகாணங்களில் இருந்து
ஆட்கள் தன்னிச்சையில்லாதவாறு
அகற்றப்பட்டமை காணாமற் போனமை
தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு,
நீதி அமைச்சு, அறை இல; 04,
கொழும்பு-12.

[சி/668]

குருநகர் வணிகர் கழகம்

## பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும்

இடம்: யுத்கார்மேல் மண்டபம், குருநகர் பாங்சால் வீதி
திகதி: நாளை (25 - 02 - 95) சனிக்கிழமை
நேரம்: பிற்பகல் 3-00 மணி

இக்கூட்டத்தில் சகல வர்த்தக நிலைய உரிமையாளர்களும் கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து தமது வியாபார நிலையங்களை மூடிவிட்டு தவறாது கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

யோ. செ. அல்போன்ஸ் — தலைவர்
அ. அகஸ்ரின் — செயலாளர்

(35356)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப். 24
பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் இவ்வார இறுதியில் இன்று பிற்பகல் 2.15 மணி முதலும் நாளை காலை 8.30 மணி முதலும் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் யாழ் மத்திய கல்லூரி, — யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில்.

★ யாழ் இந்து எதிர் சென் ஜோன்ஸ் — யாழ். இந்து மைதானம்.

★ சென். பற்றிக்ஸ் எதிர் கனகரத்தினம் ம. ம. வி. — கனகரத்தினம் ம. ம. வி. மைதானத்தில்.

நாளை சனிக்கிழமை காலை 8 30 மணி முதல் ஸ்கந்தவரோதய மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி விளையாடும்.

(உ-20)

## பரீட்சை நிலைய இடம்மாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 24
தமிழீழ நிர்வாக சேவையினரால் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடத்தப்படவுள்ள போட்டிப் பரீட்சை—

அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ)

## நாளை நடக்கும் ஆரம்ப கூட்டம்

யாழ்ப்பாணம், பெப் 24
வடமராட்சி வலயத்திற்கான கரப்பந்தாட்டச் சங்கம், வலைப் பந்தாட்டச் சங்கம் என்பவற்றின் ஆரம்பக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இதில் வடமராட்சி வலயத்திற்குட்பட்ட கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆடும் சகல கழகங்களின் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

(ஓ)

## மல்லிகையின் 30 ஆவது ஆண்டு மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 24
"மல்லிகை" ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் முப்பது வருட சஞ்சிகை வெளியீட்டு ஆக்க இலக்கியப் பணியை பாராட்டும் வைபவமும் —

மல்லிகை சஞ்சிகையின் 30 ஆவது ஆண்டு மலர் வெளியீட்டு விழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

யாழ். பிரதேச கலை இலக்கியப் பேரவையைச் சேர்ந்த திரு. க. கணேசவேல் இந்த வைபவத்துக்குத் தலைமை வகிப்பார். (ஐ)

## இலவச பாடநூல்கள்

யாழ்ப்பாணம், பெப். 24
மாஹோவில் எடுத்துவரப்பட்ட யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாட நூல்களை இறக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

## விலங்கு வேளாண்மை அபிவிருத்தி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விலங்கு வேளாண்மைத் துறைக்கு ஊக்கமளிக்கும் முகமாக மேஜர் பிரதாப் செட்டிப் பண்ணையில் விலங்கு வேளாண்மைக்காக ஓர் கூட்டுப்பண்ணை அமைத்துச் செயற்படுத்தி வருகிறது.

இக் கூட்டுப்பண்ணையில் நல்லின பால் கறவைப்பசுக்கள், ஆடுகள், பன்றிகள், முயல்கள், முட்டைக்கோழிகள், இறைச்சிக் கோழிகள், தாராக்கள் மற்றும் அழகுப் பறவையினங்களும் இங்கு நல்ல பராமரிப்புடன் வளர்க்கப்படுகின்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகை அலங்கரிப்பாளருக்கு எய்ட்ஸ் நோய் போதனை

### மத்திய மாகாணசபை நடவடிக்கை

கொழும்பு, பெப். 24

மத்திய மாகாணத்தில் உள்ள சிகை அலங்காரத் தொழிலாளர்களுக்கு எய்ட்ஸ் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் பற்றி போதிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

மத்திய மாகாண சபையின் சுகாதார அமைச்சு இதற்கான திட்டம் ஒன்றை வகுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்குச் செல்லும் வாடிக்கையாளர்கள் மத்தியில் எய்ட்ஸ் நோய் பரவாமல் பார்த்துக் கொள்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சவரம் செய்யும் உபகரணங்கள் எய்ட்ஸ்நோய் காவிகளாகமாறக்கூடிய அபாயம் இருப்பதாக மாகாண சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஐ-எ)

## 15ஆவது இசை விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், பெப். 24

இலங்கை இளங்கலைஞர் மன்ற 15ஆவது ஆண்டு 15 நாள் இசைவிழாவின் இறுதி நாளான நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு என். கே. கணேசன், கே. சிவதாஸ் ஆகியோரின் நாதஸ்வரமும், என். கே. வீராசாமி, எஸ். சொர்ணலிங்கம் ஆகியோரின் தவிலும் இணைந்த மங்கள வாத்திய இசை இடம் பெறும்.

மாலை 5 மணி – 6 மணி வரை மன்ற மாணவர்களின் பாட்டு, மிருதங்க இசை, வீணை இசை, மாலை 6 மணிக்கு போராளிக் கலைஞரான அமரேசனின் பாட்டு 6.30 மணிக்கு அம்பிகை வைரவநாதனின் பாட்டு, 7 மணிக்கு போராளிக் கலைஞர்களான தினேஸ், வசந்தன், நிதர்சன் ஆகியோரின் மிருதங்க இசை, 7.20 மணிக்கு மோகனாம்பிகை கணேசனின் பாட்டு, இரவு 8.20 மணிக்கு வாத்திய இசை, 9 15 மணிக்கு திருமதி சாந்தினி சிவநேசனின் தயாரிப்பில் கொக்குவில் கலாபவன மாணவிகள் வழங்கும் பரதநாட்டிய நிகழ்ச்சி என்பன இடம்பெறும்.

காரைநகர் வாரிவளவு விர வேங்கை சஸ்ரோ (இயல்வாணன்) ஆதரவில் நடைபெறும் இறுதி நாள் நிகழ்விற்கு, கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தலைமை வகிப்பார்.

நிதர்சனப் பொறுப்பாளர் திரு. ஜவான், மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ரதி ஆகியோர் மங்கள விளக்கை ஏற்றி ஆரம்பித்து வைக்கும் இவ்விழாவில் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. சி. கரிகாலன் பிரதம அதிதியாகவும், யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி, சமூக சேவையாளர் சுன்னாகம் மணியம் ஸ்ரோஸ் திரு. எஸ். சோமசுந்தரம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிப்பர் (ஐ-5-111)

# உள்ளூராட்சி சபை தேர்தல் வருட இறுதிக்குஒத்திவைப்பு

கொழும்பு, பெப். 24

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் இவ்வாண்டின் இறுதியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவை பழைய தொகுதி வாரித் தேர்தல் முறையின் கீழ் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக தற்போதைய தேர்தல் சட்டம் திருத்தப் படவிருக்கின்றது.

உள்ளூராட்சித் தேர்தல்கள் நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை நடத்தப்படுகின்றன.

1991 ஆம் ஆண்டில் வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டன. 1993ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கிழக்கிலும் வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

அரசமைப்பின்படி தென் பகுதியில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு எதிர்வரும் ஜூன் மாதத்தில் நடத்தப் பட வேண்டும்.

எனினும் — அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மைப்பலத்துடன் சட்டம் ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் இத்தேர்தலை ஒத்திவைக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் தேர்தல்களில் வாக்களிக்கும் தகைமையை சுமார் 12 லட்சம் பேர் பெற்றுள்ளனர் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (ஐ-எ)

## ஆசிய வங்கி இயக்குநர் குழு இன்று கொழும்பு விஜயம்

கொழும் , பெப். 24

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இயக்குநர் சபை உறுப்பினர்களின் குழு ஒன்று இன்று வெள்ளிக்கிழமை கொழும்பை வந்தடையும் என்று அறிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா, பிரதிநிதி அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் மற்றும் நிதி அமைச்சு அதிகாரிகளுடன் இக்குழு பேச்சுகள் நடத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் நடைமுறைப்படுத்தப் படும் அபிவிருத்தித்திட்டங்களின் முன்னேற்றம் பற்றியும் இக்குழு நேரில் பரிசீலனை செய்யும் என்று தெரிவிக்கப் படுகிறது. [ஐ-எ]

## ஜனவரி ஒய்வூதிய வவுச்சர்; தவறுக்கு செயலகம் கவலை

யாழ்ப்பாணம், பெப். 24

1995 ஜனவரி மாத ஓய்வூதிய வவுச்சர்களில் ஏற்பட்ட தவறுகளை ஒட்டி யாழ். செயலகம் வருத்தம் தெரிவிப்பதாக அதன் பிரதம கணக்காளர் திரு சு. சிவபாலன் அறிவித்துள்ளார்.

''கொழும்பில் கணனி மூலம் ஓய்வூதிய வவுச்சர்களைத் தயாரிக்கும்போது வேலைப்பளுவின் காரணமாக சில ஓய்வூதியர்களின் ஓய்வூதியத்தில் தவறுகள் ஏற்பட்டுள்ளமை எம்மால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது எனினும் இவை தற்போது திருத்தப்பட்டு வருகின்றன

''ஏற்கனவே 95 பெப்ரவரி, 95 மார்ச் மாதங்களுக்குரிய ஓய்வூதிய வவுச்சர் கணனி மூலம் அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், 95 ஜனவரியில் ஏற்பட்ட இத்தவறுகள் 95 ஏப்ரல் வவுச்சரில் திருத்தப் படும்.

95ஜனவரியில்தவறுதலாகக் குறைத்துக் கொடுக்கப்பட்ட ஓய்வூதியத்தின் 95 ஜனவரி தொடக்கம் 95 மார்ச் வரையிலான பாக்கிப்பணம் யாழ். செயலக ஓய்வூதியக் கிளையில் கையால் தயாரிக்கப் பட்டு காசோலை மூலம் அந்தந்த வங்கிகளுக்கு கூடிய விரைவில் அனுப்பி வைக்கப் படும்''– என்று அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இத்தவறு பற்றிய செய்தி கடந்த 17 ஆம் திகதிய உதயனில் வெளியாகியது. (ச-100)

## இரகசிய ஆவணங்கள் வெளியிடப்படும்

கொழும்பு, டெப். 24

எதிர்வரும் உள்ளூராட்சி மற்றும் தேர்தல்களின் போது தமது பிரசாரத்துக்குப் பயன் படுத்தவென, பிரபல பத்திரிகையாளர் ரிச்சட் டீ சொய்ஸாவின் படுகொலை பற்றிய இரகசிய ஆவணங்களை வெளியிட பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (5)

## ஸ்ரீஇராமகிருஷ்ண திதி பூஜையும் கலை நிகழ்வும்

வடமராட்சி, பெப். 24

ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்சரின் பிறந்த நாள் திதி பூஜையும் கலை நிகழ்வுகளும் எதிர்வரும் 3 ஆம் திகதி பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெறவுள்ளன. (இ-5-173)


சுழிபுரம்

ஸ்ரீ கதிர் வேலாயுதசுவாமி கோயில்

சகஸ்ர (1008)

சங்காபிஷேகம்

இன்று (24-02-1995) வெள்ளிக்கிழமை காலை 8-00 மணிக்கு ஸ்ரீ கதிர் வேலாயுதப் பெருமானுக்கு சகஸ்ர (1008) சங்காபிஷேகம் நடைபெறும்.

மாலை 5-00 மணிக்கு திருக்கல்யாணமும் திருஊஞ்சலும் சுவாமி வீதி உலாவும் இடம்பெறும்.

பிற்பகல் 1-00 மணிக்கு அன்னதானம் நடைபெறும்.

விசேட நிகழ்ச்சிகள்

மங்கள வாத்தியங்கள்

★ கோண்டாவில் நாதஸ்வர மேதைகள்
V. K. கானமூர்த்தி — V. K. பஞ்சமூர்த்தி சகோதரர்கள்

★ நாதஸ்வர வித்துவான்
P. R. சிவகுமார் குழுவினர்

★ T. நந்தகுமார் குழுவினர்

வில்லுப்பாட்டு

பட்டணத்தார்

''ஈழநல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினர்''

– சங்காபிஷேக சபை.

(35351)



பருத்தித்துறை ப.தெ.வ.அ. கூ. சங்கம், மந்திகை. புலோலி.

அறிவித்தல்

சங்கங்கள், நிறுவனங்கள், தனிநபர்

எமது நிறுவனத்திடமிருந்து 1994 – 10 – 31 க்கு முன்னர் ஏதாவது வருமதி இருப்பின் ஆதாரத்துடன் எழுத்து மூலம் 1995 – 03 – 08 க்கு முன்னர் எமக்கு அறியத் தரவும் தவறும் பட்சத்தில் பின்னர் எக் கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

— பொதுமுகாமையாளர்,

புலோலி. [சி-665]



தாதி பயிற்சி நெறி

DIPLOMA IN NURSING

28 - 02 - 1995இல் ஆரம்பமாகின்றன.

1. கல்வித் தகைமை:- க. பொ. த. [சாதாரணம்]
2. விசேட மருந்தியல் பயிற்சி உள்ளடக்கப்பட்டது.
3. 6 மாத கால பயிற்சி நெறி
4. பிரபல வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சி.
5. போராளிகள், மாவீரர் குடும்பத்தவர்க்கு இலவசக் கல்வி.

சாயி மருத்துவக் கல்லூரி

இல. 10 பருத்தித்துறை வீதி,
(அரச தாதியர் பயிற்சிப் பாடசாலை முன்பாக)
யாழ்ப்பாணம்.

[சி 388]


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 20 -- 07 -- 1938

மறைவு: 25 -- 01 -- 1995

அமரர் பொன்னையா சிவலிங்கம்
(மருந்தாளர், மாநகரசபை கொழும்பு)

கற்றவர் போற்றி கனிவோடு உம்மை
நற்சிறப்போடு நடத்தியே வந்தார்,
சொற்றிறனால் சிரிப்பூட்டி, மேலும்
பற்றோடு பழகுமுயர் பண்பு கொண்டீர்!
வற்றாத அன்பு தந்து எங்களையே
இற்றரையில் உயரவேநீர் செய்தீர்!
சுற்றமோடு மகிழ்ந்திருக்கும் வேளையிலே
நற்பதப் பேறடைய நடுவயதில் நாடியதேன்?
அற்புத இறைபதத்தை அடைந்த தலைவா
ஆறாது எம்துயரே, அடைக சாந்தி!

இவ்வண்ணம்:

மனைவி: திருமதி பாக்கியலட்சுமி, சிவலிங்கம் (அரசினர் முதியோர் இல்லம், கைதடி)

பிள்ளைகள்: திருமதி விஜிதா பாஸ்கர் (நோர்வே)
செல்விகள் சி. சுஜாதா, சி. அஜந்தா

மருமகன்: ம. பாஸ்கர் (மகேஸ்கண்ணா) (நோர்வே)

பேர்த்தி: பா. மயூரி [நோர்வே]

26, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம்.

(35346)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 16 — 09 — 1955

உதிர்வு: 07 — 03 — 1994

கலாநிதி (திருமதி)
சுலோஜனா மகேந்திரன்
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடம்)

திதி: 24 — 02 — 1995

கறந்த பால் முலை புகா
கடைந்த வெண்ணைமோர் புகா
உடைந்து போன சங்கினோசை
உயிர்களும் உடல் புகா
விரிந்த பூவும் உதிர்ந்தகாயும்
மீண்டும் போய் மரம் புகா
இறந்தவர் பிறப்பதில்லை
யில்லை யில்லை யில்லையே
ஓம் சாந்தி! சாந்தி!!

கணவர், பிள்ளைகள்,
தாய், தந்தை, சகோதரி
குடும்பத்தினர்.

தேவாலய வீதி,
சங்கானை.

(35352)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

45 நாட்கள் நிரம்பிய நல்ல இன அல்சேஷன் நாய் குட்டிகள் [விற்பனைக்குண்டு. தொடர்பு: S. குமார், 16/18, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். [சி/664]

எமது சங்கத்தில் சுத்தமான பசு நெய் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் கீழ் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்: பொதுமுகாமையாளர், கலாசாலை வீதி, யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். [சி-655]

### இலகு திருமண சேவை

36 வயது, பூசம், செவ்வாய் 2, B Sc. என்ஜினியருக்கு U.K.இல் மணப்பெண்ணும் 34 வயது, புனர்பூசம், செவ்வாய் 1, U.K Finance Directorக்கு இலங்கையில் மணப்பெண்ணும் தேவை. விமலா, யாழ். நாச்சிமார் கோயிலடி (35345)

30 வயது, அவிட்டம் 3, கிரகபாவம் 60, பிரான்ஸிலுள்ள மணமகனுக்கு ஏற்ற மணப்பெண் ஐரோப்பா நாடுகளிலோ, கனடாவிலோ வேண்டப்படுகிறது. வேண்டிய மணமக்களுக்கு நாடுங்கள்: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ்/ நாச்சிமார், கோயிலடி. (35304)

### வாடகைக்குத் தேவை

யாழ் நகரிலிருந்து மூன்று மைல் சுற்றாடலில் தனி வீடு வாடகைக்குத் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். க. சதானந்தன், இல. 24/1, அடப்பன் வீதி. யாழ்ப்பாணம் [35350]

### பாலர் ஆசிரியராக

விரைவில் பயிற்சி ஆரம்பம்: க. பொ. த. (சா/த) கடைசித் தகைமை சனி. ஞாயிறு சமுகம் தர வசதியற்றோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (35295)

### காவேரி சீயாக்காய் பவுடர்

மக்கள் நலனுக்கு இயற்கை அளித்த சீதனம், 80% சீயாக்காயும், 20% இயற்கைப் பொருள்களும், சேர்த்து தயாரிப்பது சீயாக்காய் பவுடர் என்று கேட்காமல், காவேரி சீயாக்காய் பவுடர் என்று கேட்டு வாங்குங்கள். எங்கும் கிடைக்கும் [34909]

### ரி. வி. டெக் திருத்துதல்

சகல றேடியோக்களையும், ரி. வி. டெக், எல்லாவித மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி], வானவில் அருகில் யாழ்ப்பாணம், கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-362]

### புலமைப் பரிசில் - 1995

யாழ். Bond நிறுவனத்தாரால் ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் [புதியபாடத் திட்டத்தின்படி பொதுவிவேகம், பொது அறிவு, கணிதம், தமிழ் விடைகளுடன் 10/- மட்டும்) மாதத்தின் 2வது, 4வது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. முன்னணி புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம். (8238)

---

## G. C. E. (A/L)
## ENG. LITERATURE
[ Sponsored by Tacep ]

A few more Vacancies. Call Saturday 2 p. m.

S. PATHMANATHAN,
Academic Co - ordinator.

PALALY TEACHERS' COLLEGE,
Thirunelvely.

(35336)

---

யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
திருநெல்வேலி கிழக்கு. கோப்பாய்.

## பதவி வெற்றிடம்

பதவி :-
**பால் நிலைய முகாமையாளர்**

குறி இல. :- 165,88 — 12

சம்பளம் :-
855/- — 30 X 7 — 40 X 8 — 1,385/-
இத்துடன் கூட்டுறவு ஊழியருக்கான ஏனைய படிகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமை :-

அ) கூட்டுறவுச்சங்க ஊழியர் 13ஆம் சம்பளத் திட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 14 ஆம் சம்பளத் திட்டத்தில் நான்கு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு பணியாளர் தராதரப்பத்திரம் (உயர் தர) சான்றிதழ்/ க பொ. த. (உயர் தரம்) சான்றிதழ் மூன்று பாடங்கள் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

குறிப்பு :- பால் தொடர்பான தொழில்நுட்ப அறிவும் அனுபவமும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதுடன் மேலதிக தகைமை அனுபவம் உள்ளவர்கள் மேற்படி சம்பளத் திட்டத்தில் பொருத்தமான இடத்தில் அமர்த்தப்படுவர்.

வயது எல்லை :- **23 — 50** வரை

வதிவிட தகைமை :-
குறைந்த பட்சம் இரண்டு வருடங்களாவது யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

பிணைப் பணம் :-
கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சட்டத்திற்கு அமைவாக சங்கம் தீர்மானிக்கும் தொகையை செலுத்துதல் வேண்டும்.

உள்ளடக்கப்பட வேண்டியது :-
கல்வி, பிறப்பு. நற்சான்று பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் மேற்காண் விலாசத்திற்கு **10 03 - 1995** ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

**— பொது முகாமையாளர்.**

[சி-656]

---



**University of Jaffna.**

## TENDER NOTICE

Sealed tenders are invited from contractors registered for civil Engineering works with ICTAD for the following.

a) Painting Mathematics Block

b) Painting Medical Faculty Complex

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna until 07-03-95 on producing a receipt from Bursar, University of Jaffna for the following tender fee for each tender.

1. Refundable — Rs. 4000/-
2. Non-refundable — Rs. 250/-

Tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than 02-00p.m on 20-03-95.

Tender forms can be inspected free of charge at Maintenance Branch, University of Jaffna during office hours.

**— REGISTRAR**
University of Jaffna,
P.O.Box 57,
Jaffna.

(C/658)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 22 | 07 |
| 11 | 03 |
| 1899 | 1994 |

திருமதி
## இராசம்மா விசுவநாதக்குருக்கள்
[பத்தர் வேணிப்பிள்ளையார் கோயில், காரைநகர்]

**திதி: 24 — 02 — 1995**

உறுதுணையாய் இருந்து அமரர் ஆகிவிட்ட எம் அன்புத் தாயாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

---

கலை ஊடக இணையத்தின்
## முக்கிய அறிவித்தல்

**25 — 02 — 1995** இல் யாழ். இந்து குமாரசாமி மண்டபத்தில் நடைபெற இருந்த கலை ஊடக இணையத்தின்

''முதலாம் ஆண்டு பொதுச்சபைக் கூட்டமும் அங்கத்தவர் தெரிவும்''

தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை இத்துறை சார்ந்த சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

செயலாளர்,
கலை ஊடக இணையம்.

(சி/666)

---

## நவோதயம் - 95
## ஊழிய மாநாடு

பிரதான பேச்சாளர்:
**கலாநிதி றொபர்ட் கோல்மன்**
(''மாஸ்டர் பிளான்ஸ் ஒப் இவென்ஜலிசம்'' எழுத்தாளர்)
மற்றும் உள்ளூர் பேச்சாளர்கள்

ஏப்ரல் **24 — 29** வரை
தலவில, புத்தளம்

விண்ணப்பப்பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கு தொடர்பு கொள்ள:

**நவோதயம் - 95**
த பெ 131,
கொழும்பு.

**நவோதயம - 95**
462, பிரதான வீதி,
கண்டிகுளி,
யாழ்ப்பாணம்.

[35332]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 15 | 07 |
| 08 | 03 |
| 1909 | 1994 |

## திருமதி நாகரத்தினம் சுப்பையா
(மாம்பழம்)
[சுந்தரபவனம், காங்கேசன்துறை வீதி, கொக்குவில்]

**திதி: 24 — 02 — 1995**


ஓராண்டு சென்றிடினும் மாறாது உங்கள் பாசம்
பல்லாண்டு சென்றிடினும் மறையாது —
உங்கள் நினைவு.

உங்கள் நினைவலையில் நீந்தி வாடும்;
மக்கள், மருமக்கள்,
பேரர், பூட்டர்.

(35348)

---

நீங்காத நினைவில்
## 2ஆம் ஆண்டு நினைவு



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 21 | 15 |
| 03 | 02 |
| 1961 | 1993 |

## வைத்திலிங்கம் அமிர்தலிங்கம்
(இந்திரன்)

**திதி: 24 — 02 — 1995**

''வையத்து வாழ் வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

அன்பால், அறிவால், பண்பால், பாசத்தால் எம்மை எல்லாம் வழி நடத்தி கண்ணை இமை காப்பது போல எங்களை காத்து வந்த இந்திரனே! எங்கள் உயர்வு காணும் வேளையில் எங்களை மறந்து காலனுடன் சென்றதேனோ? எங்கள் உயிர் உள்ள வரை உங்கள் ஞாபகத்திலே வாழும். ஆத்மா சாந்தியடைய நாராயணனை வேண்டுகிறோம்.

— குடும்பத்தினர்.

(35328)

---

# 8 ஆயிரம் ஈழ அகதிகள் விரைவில் நாடு திரும்புவர்

சுமார் 8 ஆயிரம் ஈழ அகதிகள் அடங்கிய மற்றுமொரு அணி அடுத்த ஒரு மாதத்துக்குள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 27 ஆம் திகதி முதல் அடுத்தமாதம் 15 திகதி வரை 4 ஆயிரம் தமிழ் அகதிகள் இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்றும் — 4 ஆயிரம் பேரைக் கொண்ட அடுத்த அணி அடுத்த மாதம் 7 ஆம் திகதிக்கும் 11 ஆம் திகதிக்கு இடையில் சென்னையிலிருந்து திருகோணமலைக்கு திரும்பும் என்றும் கொழும்பில் அரச வட்டாரங்கள் தெரிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது. (ஐ — 5)

---

இலங்கை
## இளங்கலைஞர் மன்றத்தின்
# 15ஆவது இசை விழா

**கலா மண்டபம் - சட்டநாதர் வீதி, நல்லூர்.**
**14ஆம் நாள் 24 - 02 - 1995**
**வெள்ளிக்கிழமை**

**வி. எஸ். பி. குறூப்**
**அருச்சுனா சாலை**
யாழ்ப்பாணம்
ஆதரவில்

மாலை

**4-00 — 5-00 மங்கல இசை**
கே உதயநாதன், ஆர். கோவிந்தராசா — நாதஸ்வரம்
கே. மோகனசுந்தரம், தி. ஜெயச்சந்திரன் — தவில்

**5-00 — 5-20 பாட்டு**
வீ. சாந்தி, கே. பிரணவமலர், எஸ். அன்புச்செல்வி, இ. அமிழ்தினி, ந. மதுரா, கே. பிரதீபா, பா. தர்சிகா, சி. தமிழ்ச்செல்வி, செ. ஜெயராணி, செ. உதயராணி, சோ. காயத்திரி, து. சிவாஜினி, ச. ரஜனி, ரா. அருணேஸ்வரி, கி. விஜிதா, இ. புஸ்பமலர் — பாட்டு
ப. உஷா — வயலின்
டெனி யசோதரன் — மிருதங்கம்

**5-20 — 5-40 வயலின் இசை**
வனஜா கணேஸ்வாமி, சஜித்தா நாதன் — வயலின்
எம். கஜன் — மிருதங்கம்

**5-40 — 6-00 வீணை இசை**
கே. கலைவாணி, எஸ். கிருஷ்ணவதனா, ஆர். சாயிபிரபா, எஸ். கல்பனா — வீணை
எஸ். சாரங்கன்
எம். கஜன் — மிருதங்கம்

**6-00 — 6-45 வயலின் இசை**
உஷா பரமரட்சகபாலன் — வயலின்
பி. ரதிரூபன் — மிருதங்கம்
எம். கஜன் — கடம்

**6-45 — 7-30 பாட்டு**
உமாரமண சர்மா — பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
எஸ். துரைராஜா — மிருதங்கம்

**7-30 — 7-50 மங்கல விளக்கேற்றல்**
திரு. ச. அன்புத்தேவன் அவர்கள் (புஸ்பா அன்கோ)
திரு. வி. எஸ். பாலச்சந்திரன் அவர்கள் (வி. எஸ். பி குறூப்)
திரு. பே. யோகநாதன் அவர்கள் (லலிதா நகை மாளிகை)
திரு. க. வேலாயுதம் அவர்கள் (ஆசிரியர், கொக்குவில் இந்துக்கல்லூரி)
திரு. க. செல்வநிதி அவர்கள் (மாலா மருந்தகம்)

★ அருளுரை;
சிவஸ்ரீ. பா. சுந்தரேஸ்வரக்குருக்கள் அவர்கள்

★ தலைவர்
கலாநிதி சபா. ஜெபராசா அவர்கள் (தலைவர், நுண்கலைப்பீடம் யாழ். பல்கலைக்கழகம்)

★ பிரதம அதிதி
பேராசிரியர் க. குணரத்தினம் அவர்கள் (துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

★ சிறப்பு விருந்தினர்
திரு. க. பாலசுப்பிரமணியம் J. P. (கௌரவ செயலாளர், சைவ முன்னேற்ற சங்கம், கொழும்பு, கௌரவ செயலாளர், அருள்மிகு சிவசுப்பிரமணிய ஸ்வாமி கோயில், கொழும்பு-2)

**7-50 — 8-50 வயலின் சோலோ**
உ. ராதாகிருஷ்ணன், சு. கோபிதாஸ் — வயலின்
அ. கண்ணதாஸன் — மிருதங்கம்
சதா வேல்மாறன் — கடம்
எஸ். ராஜா — முகர்சிங்

**8-50 — 10-00 முழங்கும் முரசு**
கலைஞர் வேல் ஆனந்தனின் நெறியாள்கையில்
திருமதி பார்வதி சிவயோகநாதனின்
தென்மராட்சி கலாலயம் அளிக்கும்
''முழங்கும் முரசு''
(கதகளி ஆடல் வடிவில் - தேதிமுறை ஆடற்கதை)

★ சாஹித்யம்;
கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை

★ இசை:
இசைப்பரிதி கண்ணன்

வாழ்த்துவோர்:
**மாலா மருந்தகம்**
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.

[சி-541]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## தீர்க்கமற்ற நிலையா?

அரசாங்கப் படைகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு மேலாக பெரிய அளவிலான மீறல் எதுவுமின்றி நடைமுறையில் இருந்து வருகிறது.

மோதல் தவிர்ப்பு உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கு கண்காணிப்புக் குழுக்கள் செயற்படும் என்பதே ஏற்பாடாகும். ஆனால் ஒன்றரை மாதங்கள் கடந்தும் அவை இன்னும் இயங்கத் தொடங்கவில்லை.

கண்காணிப்புக் குழுக்கள் இயங்காமைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று அரசாங்கம் கூறி வருகிறது. ஆனால் உண்மை அதுவல்ல.

மோதல் தவிர்ப்பை கண்காணிப்பது தொடர்பாக உரிய படிமுறைகள் எதுவும் ஒப்பந்தத்தில் இல்லை. இரு சாராருக்கும் முறுகல் நிலையைத் தோற்றுவிக்கக் கூடிய விடயங்கள் குறித்து ஒப்பந்தத்தில் போதிய விளக்கமில்லை.

எனவே கண்காணிப்புச் சம்பந்தமான உரிய விளக்கங்களும், படிமுறைகளும், மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்துடன் இணைப்பாகச் சேர்க்கப்பட்ட பின்னரே கண்காணிப்புக் குழுக்களை அமைக்க முடியும், இயக்க முடியும் என்பது விடுதலைப் புலிகளின் நிலைப்பாடாகும்.

விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாட்டை வெளிநாடுகளிலிருந்து வந்த பிரதிநிதிகள் சரியானதே என்று ஒப்புக்கொள்கிறார்கள்

மோதல் தவிர்ப்புத் தொடர்பாக மேலும் உறுதியான வரையறைகள் வகுக்கப்பட்டால் மட்டுமே கண்காணிப்புப் பணியை ஒழுங்காகச் செய்யலாம் என்பது அவர்களின் நிலைப்பாடு.

இருதரப்பினருமே நிரந்தரமான போர் நிறுத்தத்தை நோக்கி முனைப்புடன் செயற்பட்டாலே கண்காணிப்புக் குழுவினரின் கடமைகள் இலகுவாக இருக்கும் என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

ஆனால் அரசாங்கம் இது விடயத்தில் போதிய அக்கறை காட்டாது காலத்தைக் கடத்துகிறது.

கண்காணிப்புக் குழுக்கள் இயங்குவது சம்பந்தமாக விடுதலைப் புலிகளுடன் பேசி அவர்களின் நிலைப்பாட்டை அறிவதற்காக, அக்குழுக்களுக்குத் தலைமை வகிக்கவுள்ள வெளிநாட்டுப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வந்து சென்று இருபது நாள்கள் கரைந்து போயின.

அவர்கள் தமது அவதானிப்புகளை, கருத்துக்களை அரச உயர்பீடத்திற்கு அறிவித்திருந்தும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்துக்கான இணைப்பைத் தயாரிப்பது குறித்து அரசு எள்ளளவான நடவடிக்கையையேனும் இன்னும் தொட்டதுமில்லை.

அரசின் இந்த அசமந்தப் போக்கு காத்திராப் பிரகாரமானதோ அல்லது தற்செயலானதோ அன்று. இனப்பிரச்சினைத் தீர்வினதும், போரை முடிவுக்குக் கொண்டு வருவதினதும் அடித்தளமாக விளங்கும் இவ்விடயத்தில் அசமந்தம் காட்டுவது ஏற்புடைத்தல்ல; இதனைப் பொறுத்துக் கொள்ளவும் முடியாது.

ஆகையால், கண்காணிப்புக் குழுக்களை இயங்கச் செய்வதிலும், மோதல் தவிர்ப்பை போர் நிறுத்தமாக மாற்றுவதிலும் அரசாங்கம் காட்டும் அசமந்தம் அல்லது அக்கறையின்மை திட்டமிடப்பட்ட ஒன்றெனவே கொள்ளப்பட வேண்டும்.

போர் நிறுத்தத்தைக் கொண்டு வந்து அதற்கு முடிவு சூட்டுவதில் அரசாங்கம் இன்னமும் தீர்க்கமான ஒரு நிலைக்கு வரவில்லை என்பதாலேயே இந்தத் திட்டமிட்ட அசமந்தம் எனக் கொள்ளலாம்.

வாயளவில் போருக்கு முடிவு, இனப்பிரச்சினைக்குத் அரசியல் தீர்வு என்று கூறிக்கொண்டு செயலளவில் அதற்கு நேர் எதிராக நடந்து கொள்வதை உடனடியாக நிறுத்தி அரசு தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும். இல்லையேல் இந்த நாட்டில் இரத்தக்களரி மட்டும் தொடராது; நாடு இரண்டுபடுவதையும எவராலும் தடுக்க இயலாது போகும்!

13,000 பேர் பற்றாக்குறை

# தமிழ் பேசும் ஆசிரியர்கள் ஆட்சேர்ப்புத் திட்டம் தேவை

கொழும்பு, பெப். 24

''நாட்டிலுள்ள தமிழ் பேசும் பாடசாலைகளில் நிலவி வரும் தமிழ் பேசும் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய விசேட தமிழ் பேசும் ஆசிரிய நியமனத் திட்டம் ஒன்றை அமுல் செய்க''

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதி சந்திரிகாவை இவ்வாறு கேட்டுள்ளார்.

முன்னைய அரசாங்கங்களின் திட்டமிட்ட புறக்கணிப்பு நடவடிக்கைகளினால் நாட்டில் சுமார் 13 ஆயிரம் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இது சேவையிலுள்ள மொத்த ஆசிரிய எண்ணிக்கையில் 27 சதவிகிதம் ஆகும்.

எனவே தமிழ் பேசும் ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விசேடமான தமிழ் பேசும் ஆசிரியர்கள் ஆட்சேர்ப்புத் திட்டம் ஒன்றை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என தமிழ் பேசும் மக்கள் சார்பில் உங்களை வேண்டிக் கொள்கின்றேன்—

இவ்வாறு அவர் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (இ-14)

ஊழல் குற்றம் சுமத்தப்பட்டோரின்

## வெளிநாட்டு பயணங்களை அரசாங்கம் தடை செய்யும்

ஊழல் மற்றும் மோசடிக் குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள அரச உயர் அதிகாரிகள் மற்றும் எதிர்க்கட்சி அரசியல் வாதிகள் வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்வதை அரசாங்கம் தடைசெய்யவிருக்கிறது.

இப்பிரமுகர்களுக்கு எதிராக விசேட ஜனாதிபதி ஆணைக் குழுவிற்கு முறைப்பாடுகள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

## தமிழ் மொழிச் சட்டம் அமுல் செய்ய துரித ஏற்பாடு

கொழும்பு, பெப். 24

தமிழ் மொழிகள் விசேட சட்டத்தை அமுல் நடத்துவதை துரிதப்படுத்துவது என்று அரச கரும மொழிகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை தமிழ் எம். பிக்களுடன் நடத்தப்பட்ட சந்திப்பை அடுத்து ஆணைக்குழு இவ்வாறு முடிவு செய்திருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-எ)

## கொழும்புக்கு கருவாடு; அரச அதிபர் முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 24

தென்பகுதிக்கு கப்பல்மூலம் கருவாட்டை ஏற்றுமதி செய்வதற்கு யாழ். அரச அதிபர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

யாழ்ப்பாணத்தில் மீனவர்கள் கருவாட்டை கூடுதலாக பதப்படுத்துவதால் கருவாட்டின் விலையும்குறைந்துள்ளது

இதனைத் தொடர்ந்து கருவாட்டை கப்பல் மூலம் தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க-17)

## உர விலையேற்றத்தால் மானியமும் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 24

உலக சந்தையில் உரவகைகளின் விலை முப்பது சதவீதத்தால் அதிகரித்துள்ளதை அடுத்து விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரமானியத்தின் பெறுமதியும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இதுவரை ஐநூறு ரூபாவாக இருந்த உரமானியப் பெறுமதி தற்போது எண்ணூறு ரூபாவாக அதிகரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த அதிகரிக்கப்பட்ட உர மானியம் இதுவரை சிறுபோகச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கே வழங்கப்பட்டது. ஆனால் இனிவரும் காலங்களில் பெரும் போகத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் இது விஸ்தரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் யாழ். மாவட்டத்தில் பருவகாலம் மாற்றமடைவதால் விவசாயிகள் சிறுபோகச் செய்கையில் ஈடுபடுவதில்லை. எனவே இந்த விவசாயிகள் உரமானியத்தைப்பெற முடியாதிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5-7)

## நாவன்மை போட்டிகள்

மயிலணி பெப 24

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு சுன்னாகம் இந்து சமய அபிவிருத்திசபை மாணவர்களுக்கிடையேயான நாவன்மைப் போட்டிகளை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு, சுன்னாகம் கதிரமலைச் சிவன்கோயில் மண்டபத்தில் நடத்தவுள்ளது. (ஐ-5)

## பாடசாலை மீண்டும் பழைய இடத்தில்

சண்டிலிப்பாய், பெப். 24

மானிப்பாய் சென். ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் ஒரு பகுதியில் கடந்த இரண்டரை வருடங்களாக தற்காலிகமாக இயங்கி வந்த, பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோமன் கத்தோலிக்க கனிஷ்ட வித்தியாலயம் இம்மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் முன்பு இப்பாடசாலை இயங்கி வந்த இடத்தில் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. (5-135)

## கொழும்பு கண் ஆஸ்பத்திரியில் தீ விபத்து!

கொழும்பு பெப். 24

கொழும்பில் உள்ள கண் ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் மின்சாரக் கோளாறு காரணமாக தீவிபத்து ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக நேற்று முன்தினம் நடைபெறவிருந்த கண் சத்திரசிகிச்சைகள் ஒத்திப்போடப்பட்டன.

இத்தீவிபத்தினால் ஆஸ்பத்திரியில் உள்ள மின் சாதனங்கள் சேதமடைந்தன என்று அறிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

# இந்து ஆலயங்களை புனரமைத்து மக்கள் வழிபாட்டுக்கு வழி செய்க

இந்து சமயப் பேரவை ஜனாதிபதிக்கு மகஜர்

வலிகாமம் தெற்கு பெப் 24

இனக் கலவரங்களால் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பாதிப்படைந்துள்ள நூற்றுக்கணக்கான இந்து ஆலயங்களை முன்னுரிமை கொடுத்து உடனடியாக புனரமைப்பு செய்து மக்கள் வழிபாட்டுக்கு வழி செய்யுமாறு இந்துசமய பேரவை ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்காவிடம் கோரியுள்ளது.

கைதடியில் உள்ள சிறுவர் இல்லத்தில் அண்மையில் நடைபெற்ற இந்து சமயப் பேரவையின் செயற் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானம் சம்பந்தமாக இந்து சமயப் பேரவை ஜனாதிபதி மற்றும் வடக்கு கிழக்கு மாகாண புனரமைப்புக்கான செயலணிக்குழு ஆகிய வற்றுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுளளதாவது -

இனக்கலவரங்களால் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள நூற்றுக் கணக்கான இந்துக் கோயில்கள் சேதமாக்கப்பட்டுள்ளன;

மக்களின் வழிபாட்டுக்கு இடையூறாக பல இந்து ஆலயங்களில் ஸ்ரீலங்கா ராணுவத்தினர் முகாம்கள் அமைத்து தங்கியுள்ளனர்; அதனால் பல இந்துக் கோயில்களில் நித்திய பூசைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்து சமய பேரவை, இவற்றுக்கு தீர்வுகாணுமாறு பல முறை முன்னைய அரசாங்கத்தை கோரி இருந்தபோதும் அவை கவனிக்கப்படவில்லை என்றும் அந்த மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது (5-152)

# பழந்தமிழ் இலக்கிய ஆய்வுகள் தமிழ்மொழி வளர்வதற்கு அவசியம்

நூல் வெளியீட்டு விழாவில் உரை

''தமிழ் மொழி விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியன போன்று மேலும் வேகமாக வளர்வதற்கு பழந்தமிழ் இலக்கியங்களின் ஆய்வு வளர்ச்சி அடைய வேண்டும்.''

வட்டுக்கோட்டைத் தமிழ்ச் சங்கத்தினரின் 9ஆவது வெளியீடான ''தமிழறிஞர் சரித்திர நூல்'' வெளியீட்டு விழாவில் உரை நிகழ்த்திய சங்கானைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் இவ்வாறு கூறினார்.

பண்டிதர் அ. ஆறுமுகம் தலைமையில் சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் அவர் மேலும் கூறியதாவது:

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தினர் பண்டிதர்களையும் புலவர்களையும் உருவாக்கி தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபடுகின்றனர். தமிழ் வளர்க்கும் இந்தத் தமிழ் அறிஞர்களின் வரலாற்றை எதிர்காலச் சந்ததியினர் அறிந்து கொள்ள வேண்டும். ''தமிழ் அறிஞர் சரித்திரம்'' நூல் [illegible] இதற்குப் பெரிதும் [illegible] என்றார்.

நூல் வெளியீட்டு விழாவை பாடசாலை அதிபர் திரு. க. நல்லையாவும் திரு இ. தம்பையாவும் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். பண்டிதர் மு. க. வேலாயுதபிள்ளை வரவேற்புரையையும் பண்டிதர் ம. நடராசேஸ்வரன் நூல் வெளியீட்டுரையையும் நிகழ்த்தினார்கள்.

வலி மேற்குப் பிரதேச செயலர் திரு கா. சந்திரராசா, பண்டிதை பொன். பாக்கியம் ஆகியோர் உட்படப் பலர் சிறப்புரை ஆற்றினார்கள். திரு. [illegible] [illegible] மேற்கொண்டார். (க-175)

புலிகளின் குரல் வானொலியில்

24 — 02 — 1995

வெள்ளி இரவு

★ 8-01 — கலைமஞ்சரி— நிகழ்ச்சியில் அறிமுகம், ''சுதந்திரப் பறவைகள்'' மார்கழி — தை ஏடு, சிறுகதை—க. சிவராசா எழுதிய ''முற்றத்து வேப்பமரம்'' கவிதை— ந. கிருஷ்ணா எழுதிய ''அடவாடா விடியலுக்கு வழி செய்வோம்''
★ 8-25 — கணப்பொழுது— சி. கண்ணம்மா எழுதிய ''2 ஆம் லெப்டினன்ட் முரளிதாஸ்''
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம் — வே. பாலகுமாரன் எழுதிய ''ஆப்கானில் தலையெடுத்துள்ள தலிபான்''
★ 8-50 — வாத்தியகானங்கள்

25 — 02 — 1995

சனி காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

தமிழீழ வானொலி ஒலிபரப்பு

வெள்ளி மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — கவிநேரக்கவிதைகள்
★ 5-30—மண்ணின் குரல்
★ 5-40 — நேயர் கடிதம்
★ 5-45 — வெற்றிச் சுவடுகள்
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — என் தெரிவு
★ 6-30— மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## பாடசாலைகளில்

யாழ்ப்பாணம், பெப். 24

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இணுவில் கந்தசாமி கோயில் முன்பாக உள்ள கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் திரு. க. நாகராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வைத்திய கலாநிதி சி. சிவசுப்பிரமணியமும், சிறப்பு விருந்தினர்களாக திரு. த. துரைசிங்கம், திரு. சி. தமிழ் மறவன் ஆகியோரும் கலந்து கொள்வர். (இ - 14 - 161)

## தெற்கில் ஏழு பேருக்கு எய்ட்ஸ்!

கொழும்பு. பெப். 24

கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையில் உள்ள எய்ட்ஸ் சமூக, சரும, மேக நோய் ஆய்வுகூடப் பிரிவில் கடந்த 6 வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட இரத்தப் பரிசோதனைகளிலிருந்து ஏழு பேருக்கு எய்ட்ஸ் நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கண்டி. மாத்தளை நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைகளிலிருந்தே இந்த இரத்த மாதிரிகள் இங்கு சோதனைக்காக அனுப்பப்பட்டிருந்தன என்று ஆய்வுகூட நிபுணர் தெரிவித்துள்ளார் (ஐ-14)

## சகிப்புத்தன்மை ஆண்டாக 1995 பிரகடனம்

ஜெனிவா, பெப். 24

உலகம் முழுவதும் இன, சமய மற்றும் சமூகநேயத்தை ஏற்படுத்தும் குறிக்கோளுடன், இந்த ஆண்டை சகிப்புத்தன்மை ஆண்டாக ஐ நா பிரகடனப்படுத்தியுள்ளது

அரசியல் கொந்தளிப்புகளின் விளைவாக உலக மக்கள் பலர் சமய இன சகிப்புத்தன்மை இன்றி வாழ்கிறார்கள் என ஐ. நா. தலைமைச் செயலர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி தெரிவித்தார்.

உலகம் முழுவதிலும் பல நூற்றுக்கணக்கான பூசல்கள் நிகழ்ந்து வரும் இக்காலகட்டத்தில் ஐ நா இந்த ஆண்டை சகிப்புத்தன்மை ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது (ஐ—5)

## சைபீரியா வானத்தில் ஓசோன் படலத் துவாரம்!

வானிலை நிபுணர் கண்டுபிடிப்பு

மொஸ்கோ, பெப். 24

ரஷ்யாவின் கிழக்கு மாகாணமான சைபீரியாவுக்கு மேலே உள்ள ஓசோன் படை மண்டலத்தில் துவாரம் ஒன்று தோன்றியுள்ளதாக, உலக வானிலை நிறுவன ஓசோன் நிபுணர் ரூமென் பாஜ்கோவ் தெரிவித்துள்ளார்.

சைபீரியாவில், சாதாரணமாக இருக்க வேண்டியதை விட மூன்றில் இரண்டு பகுதிக்கும் குறைவாகவே ஓசோனின் அளவு காணப்படுகிறது.

வானத்தில் ஓசோன் வாயுவின் செறிவு குறைவடைந்து வருவதாகவும், ஐரோப்பாவிற்கு மேலேயுள்ள வானில் மட்டும் ஓசோன் வாயுவின் செறிவு 5 - 10 வீதம் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வளிமண்டலத்திற்கு மேலே காணப்படும் ஓசோன் வாயுப் படலம், சூரியனிலிருந்து வரும் ஊதா கடந்த கதிர்களை பூமிக்கு வராது தடுக்கின்றது; இத்தகைய ஊதா கடந்த கதிர்களினால் தோல்புற்று நோய் உட்பட பல நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

கடந்த ஒரு தசாப்தத்திற்கு முன்பு தான் முதன் முதலில், ஓசோன் படலத்தில் துவாரம் ஏற்படுவது கண்டு பிடிக்கப்பட்டது.

எரிமலைகளில் இருந்து வெளிவரும் குளோரைட்டுகளும், குளிர் சாதனப் பெட்டிகளில் பயன்படுத்தப்படும் குளோரோ புளோரோ காபன்களும் மற்றும் குளோரின் மூலக் கூறுகளும் ஓசோன் மூலக் கூறுகளுடன் கலந்து ஓசோன் படலத்தை அழிக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## குருநகர் தொடர் மாடியில் மலசல கூடங்கள் பழுது

அதனால் அங்கு துர்நாற்றம்

குருநகர், பெப். 24

குருநகர் தொடர்மாடிக் குடியிருப்பில் உள்ள மலசல கூடங்கள் நீண்ட காலமாகத் திருத்தப்படாததால் பழுதடைந்து போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் குடியிருப்புப் பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது.

அப் பகுதியில் தொற்று நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர் மாடிக் குடியிருப்பில் ''டி புளக்'' தொகுதியிலேயே மலசல கூடங்கள் பெரிதும் சேதமடைந் திருப்பதால் அங்கு குடியிருப்போர் இடம்பெயர வேண்டிய நிலை தோன்றியிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (ஐ-51

## ப. நோ. கூ. சங்கங்களின் நெறியாளர் கருத்தரங்கு

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றுக்கு புதிதாக தெரிவான நெறியாளர் குழுவினருக்கான கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் அதன் தலைவர் திரு வே. சிவசுப்பிரமணிய தேவா தலைமையில நடைபெறும்.

கருத்தருங்கில் ''பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள்'' என்ற தலைப்பில் யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சி உத்தியோகத்தர் திரு. வீ. கே. சிவராசசுந்தரமும் —

''முகாமை ரீதியிலான பிரச்சினைகள்'' என்ற தலைப்பில் யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி பதில் அதிபர் திரு. பொ. சண்முகசுந்தரமும் —

''பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தொடர்பு முறைகள்'' என்ற தலைப்பில் யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபைச் செயலாளர் திரு. க. சிவசுப்பிரமணியமும் உரையாற்றுவார்கள். (ஐ -173)

## நூல் வெளியீடு

கலாநிதி எஸ். கே. எஸ் நாதன் எழுதிய ''சர்வதேச அரசியல்'' எனும் நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ் பல்கலைக் கழக பொருளியல் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக் கழக சமூக விஞ்ஞான மன்றத்தின் ஆதரவில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு பேராசிரியர் என்.பாலகிருஸ்ணன் தலைமை வகிப்பார். (ஒ-5)

## பாச அன்பு பதி அன்பாக பரிணமித்தாலே அருள்

அன்பென்ற உணர்ச்சியானது நேசம், கருணை, தயை, காதல், பக்தி, இரக்கம், அகிம்சை, அருள் ஆகிய பதங்களுக்கு அடிப்படையாக அமைகிறது இவ்வுணர்ச்சி ஒன்றேயாயினும் அது செல்லும் இடங்களுக்கேற்ப அகன் செயல் வேறுபடும் கடவுளிடமும், குருவிடமும் செலுத்தும் அன்பு 'பக்தி' என்றும் கணவனிடத்தில் காட்டும் அன்பு, காதல் என்றும், உயிர்களிடமும் காட்டும் அன்பு 'ஜீவகாருண்யம்' என்றும், தாய் காட்டும் அன்பு 'தயை' என்றும் கூறப்படுகிறது.

மனிதன் அன்புடையவன், அன்புசெலுத்தாமல் அவனால் வாழ முடிவதில்லை. தனித்து

ஞானக்கதிர்

வாழ்ந்த ஒருவனின் அன்பு ஆரம்பத்திலே ஒருத்தியின் அன்புடன் இணைகிறது நாளடைவில் அவ்விருவரின் அன்பும் அவர்களின் குழந்தையிடம் செல்கிறது அன்பு உற்றார், உறவினருக்கு உறுதுணையாய் இருந்து, அவருக்கு நல்ல காரியங்களைச் செய்வதில் ஈடுபடுகின்றான். அதன் பின் அவர்கள் பல சேர்ந்து நாட்டின் நற்சேவையில் அன்பு மகிழ்வடைகிறது. இவ்வாறாக விரிவடையும் அன்பு 'பதியன்பாக' மாறுகின்றது இப்பதியன்பே ஒன்றே நமக்கு நற்கதி காட்டும்.

பாச அன்பானது பதி அன்பாக மாற வேண்டும் நம் மக்களிடம் மாத்திரம் அன்பு செலுத்தினால் போதாது. சகல உயிர்களிடத்தும் அன்புள்ளவராய் இருத்தல் வேண்டும். எல்லாச் ஜீவராசிகளிடத்தும் தெய்வத்தன்மை உள்ளதென உணர்ந்து, அன்பு செலுத்துவதே உண்மையான அன்பாகும்.

இதற்கு எடுத்துக்காட்டாக மனுச்சோழன் சரிதம் விளங்குகிறது. தனது மகனுடைய தேரில் அடிபட்டு இறந்த பசுக்கன்றின் தாயின் துயர் தீர்க்க எண்ணினான் அத்தாய்ப்பசு அடைந்த வேதனையைத் தானும் அடைவதே தக்கது எனக் கருதினான் தனது ஒரே மகனைத் தேரில்கிடத்தி அவன் மேலாகத் தேரைச் செலுத்தினான் அவன் இவ்வாறு செய்யக் காரணம் பிற உயிர்கள் மேல் கொண்ட இரக்கமேயாகும்.

இத்தகைய அன்பினால் தான் இறைவனைக் காண முடியும். இக்காரணம் பற்றியே அநுபூதிச் செல்வர்கள் எல்லாம் இறைவனை அன்பு வடிவமாய்க் கண்டு இன்புற்றனர் எனவேதான் ''அன்பே சிவம்'' என்று போற்றி வழிபட்டனர் அவனைக் காண வேண்டும் என்று துடிப்பும்.

அரியாலையூர்

திருநாவு. ஈஸ்வரி

வைராக்கியமும் நிறைந்த நாயன்மார்களும் அன்பு வாழ்க்கை நெறியாக அன்பு நெறியினையே கடைப்பிடித்தார்கள

எனவே நாம் எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி, தெய்வ அருள் பெற்று வாழ்வோம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துவிழா அழைப்பு

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் 40 ஆண்டுகள் பேராசிரியராய் அரும்பணி செய்த ஆசிரியசிரோமணி

## உயர்திரு. இ. அப்பாத்துரை

அவர்களுக்கு

## முத்துவிழா

காலம்: 26-02-1995 ஞாயிறு பிற்பகல் 3 மணி

இடம்: ஆசிரிய சிரோமணி அவர்களின் "திருமந்திரம்" இல்லம்

தலைவர்: அருட்புலவர், பண்டிதர் அ. ஆறுமுகம் அவர்கள்

ஆசியுரை: அனுபூதிச் செம்மல், சிவத்திரு. சு. சண்முகரத்தினசர்மா அவர்கள்

பாராட்டுரை:

i. திரு. அ. தற்பரானந்தன் (உதவிக் கல்விப்பணிப்பாளர், சங்கானைக் கோட்டம்)
ii. ஆசிரியமணி திரு. அ. பஞ்சாட்சரம் அவர்கள்
iii. பண்டிதை பொன். பாக்கியம்

பத்திரிகையாளர் க. வாமதேவன் முதலானோர்.

பாராட்டுப் பத்திரங்கள், பொன்னாடை போர்த்துதல், பரிந்துரை வழங்குதலைக் கிராமத்துப் பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகளும் செய்வர். பழைய மாணவர்கள், நண்பர்கள், உறவினர்கள் சமுகம் தந்து ஆசிரியப் பெருந்தகையை மகிழ்விக்குமாறு முத்துவிழாச் சபை அன்புடன் வேண்டுகின்றது.

இங்ஙனம்:
விழாக்குழுவினர்

பண்ணாகம்.
24-2-95

(35365)

---

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் இன்று நடைபெற விருந்த **பாஞ்சாலி சபதம்** நாடகம் தவிர்க்க முடியாத காரணத்தினால் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

இன்ரறக்ட் கழகம்
மானிப்பாய் மகளிர் கல்லூரி.

(35362)

---

# மரண அறிவித்தல்கள்

செல்வன

## சுப்பிரமணியம் ரவீந்திரன்

கோண்டாவில் நெட்டிலிப்பாயைச் சேர்ந்த செல்வன் சுப்பிரமணியம் ரவீந்திரன் 20-2-95 கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம், சுந்தரம் ஆகியோரின் கனிஷ்ட புத்திரனும் திருப்பரங்கிரிநாதன் (பிரான்ஸ்) சிவலோகநாதன், விஸ்வநாதன், இவசண்முகநாதன், அம்பிகாதேவி, திருஞானசம்பந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இந்திராதேவி, புஸ்பராணி, கலாரஜனி, விமலேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24-2-95) கொழும்பில் நடைபெறும். இத்தகவலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
நெட்டிலிப்பாய், கோண்டாவில். — சு.சிவசண்முகநாதன் (சண்) (சகோதரன்)

(35?44)

## செ. சந்தியாப்பிள்ளை

(போயிட்டி, இளவாலை)

போயிட்டி, இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது 57 எழிலூர் கொழும்புத்துறையை வசிப்பிடமாகக் கொண்டவருமான செ. சந்தியாப்பிள்ளை நேற்று 23-02-95 காலமானார்.

இவர் காலஞ்சென்ற எலுசபேத்தின் கணவரும், மேரி கார்மேல் (கனடா), முடியப்பு [வேவுநாயகம்] ஆகியோரின் அன்புத் தந்தையும், சி சந்தியாப்பிள்ளை [இளைப்பாறிய ஆசிரியர், யாழ் இந்துக் கல்லூரி - கனடா], மு தங்கரோசு ஆகியோரின் அன்பு மாமனாரும், கனடாவைச் சேர்ந்தவர்களான சுரேந்திரன், ஜெயந்தி, குணேந்திரன், யோகேந்திரன், ஞானேந்திரன், செல்வேந்திரன், மற்றும் றசன், றூபன் (கலா டக்பொறுன் வாணிபம், திருநெல்வேலி) மைதிலி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24-2-95) மாலை 3 மணியளவில் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
ச. முடியப்பு (வேவுநாயகம்)

(35358)

## சிவக்கொழுந்து செல்லத்துரை

[இளைப்பாறிய பிரதம கணக்காளர் - பெருந்தெருக்கள் திணைக்களம்]

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும், கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து செல்லத்துரை 19-02-95 அன்று காலமானார்.

அன்னார் புஸ்பமணி என்றழைக்கப்படும் நாகம்மாவின் அன்புக் கணவரும், இங்கிலாந்தை வசிப்பிடமாகக் கொண்டவர்களான கதிர்காமநாதன், கிரி, தேவா, மாலினி மற்றும் ரவி [கொழும்பு] ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தி, ரஜனி, பத்மா, கணேந்திரன், ஜெயா ஆகியோரின் அன்பு மாமனாரும், சஜன், கவின், ஜெய்சன், தரன், நதாஷா, எம்மா, அமென்டா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் 26-02-95 ஞாயிறு மாலை கனத்தை இந்து மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. ரவிந்திரநாதன்
10/8 A 14 வது ஒழுங்கை,
கொழும்பு-13

[35361]

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24-02-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

# ஈ-நோர் தொழிற்சாலை: மீள இயக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப் 24

குருநகர் ஈ-நோர் தொழில்சாலையை மீளவும் இயங்க வைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ் செயலகத்தில் நேற்று நடைபெற்ற யாழ் மாவட்ட கடல்வள இணைப்புக் குழுக் கூட்டத்தில் இதுபற்றித் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை — ★மீன்பிடி வள்ளங்களை திருத்துவதற்கும் மீன்பிடி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் கடல்தொழிலாளர் சங்கங்களின் ஊடாக வங்கிக்கடன் வழங்குவது.

★திருகோணமலைக்கு மாற்றப்படவிருந்த மீன்பிடிப் பயிற்சிப் பாடசாலையை மீளவும் யாழ்ப்பாணத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுத்தல்.

★மீன்பிடி வள்ளங்களை இயக்குவதற்குத் தேவையான இயந்திரங்களையும், அவற்றின் உதிரிப்பாகங்களையும் கொழும்பிலிருந்து தருவிக்க நடவடிக்கை எடுத்தல் போன்ற தீர்மானங்களும் நேற்றைய கடல்வள ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்டது. (ஓ-4-7)

# கிராமிய பாசறை நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 24

புத்தூர் சிறுப்பிட்டி கிராமியப் பாசறை மாதாந்த நிகழ்ச்சி இன்றும், நாளையும் கலைமதி ச.ச. நிலையத்தில் பிற்பகல் 3 மணி முதல் நடைபெறும்.

இவ்விரு தினங்களிலும் மாலை நிகழ்ச்சிகளாக கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்றவையும் —

எதிர்வரும் 02 ஆம் திகதி இரவு 7 மணிக்கு கருத்துரைகளும் இடம்பெறும்.

தொடர்ந்து அன்றைய தினம் நடனம், கரகாட்டம், நாடகம் போன்ற கலை நிகழ்வுகளும் நடைபெறும். (ஓ)

# ஆஸ்பத்திரிக்கு 'பிக்-அப்'

யாழ். பொது வைத்தியசாலையின் பாவனைக்கு மேலும் ஒரு "பிக்-அப்" வாகனம் அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது கொழும்பில் நடைபெறும் கலந்துரையாடலில் பங்குகொள்ளச் சென்றிருக்கும் யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளரிடம் சுகாதார அமைச்சினால் இந்தவாகனம் கையளிக்கப்பட்டுள்ளது

"பிக்-அப்" வாகனத்தை யாழ்ப்பாணம் கொண்டுவந்து சேர்ப்பதற்காக ஆஸ்பத்திரி அஸ்பத்திரி அம்புலன்ஸ் சாரதியை அனுப்பி வைக்குமாறு பணிப்பாளரால் அவசரமாக செய்தி அனுப்பப்பட்டதை அடுத்து சாரதி ஒருவர் இன்று கொழும்புக்கு பயணமாகிறார்.

இந்த வாகனம் கப்பல்மூலம் அடுத்த வாரம் வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-15)

# கரடிக் கூட்டம் தாக்கி வவுனியா வாசி படுகாயம்

யாழ்ப்பாணம், பெப். 24

கூட்டாக வந்த நான்கு கரடிகளை எதிர்கொண்ட ஒருவர் அக்கரடிகளினால் கடித்துக்குதறப்பட்டு தலை, கைகள், நெஞ்சு, முதுகுப் பகுதிகளில் படுகாயமடைந்தார்.

வவுனியா இளமருதங்குளப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த செபமாலை ஞானமுத்து (48 வயது) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

முதல்நாள் இரவு வயலுக்கு காவலுக்குச் சென்ற இவர் காலை வீட்டுக்கு திரும்பிய வேளையே காட்டுக்கரையோரப் பகுதியில் இச்சம்பவம் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

துப்பாக்கியுடன் சென்ற தான் எதிர்பாராதவிதமாக கூட்டமாக நடந்து வந்த கரடிகளில் இருந்து தப்பித்துக் துப்பாக்கியால் கொள்ளசுவும் —

இலக்கு தப்பியதால் கரடிகள் தன்னை கடித்து தாக்க முற்பட்டதாகவும் துப்பாக்கியைக்கை தவற விட்டதால் கரடிகளை தாக்கமுடியாமல் காலாலேயே உதைத்து விரட்டியதாகவும், காயமடைந்தவர் தெரிவித்தார்.

படுகாயமடைந்தவர் இப்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

## இனப்பிரச்சினைக்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொது விடயங்களைக்தான் இன்னும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி: அமைதிப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகளுடன் மட்டும்தான் உங்கள அரசு பேசுகின்றது? மற்றைய தமிழ்க் குழுக்களை, தமிழ் பேராளிகளை ஏன் ஒதுக்குகின்றீர்கள்?

பதில்:- ஒதுக்குவது என்ற சங்கதி இல்லை. இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்த இன்று யாரால் உதவ முடியும். புலிப்படை தவிர வேறு எந்தக் கட்சியாலும் உதவ முடியாது.

அத்தகைய நிலைமையில் ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சு நடத்தித்தான் போரை முடிவுக்குக் கொண்டு வர முடியும்.

இந்த நாட்டில் சமாதானம் அமைதி ஏற்பட வேண்டும் என்று யாராவது உண்மையில் விரும்புவார்களேயானால் அவர்கள் இந்த முயற்சியை வரவேற்றுத்தான் ஆக வேண்டும். இது தான் உண்மை.

மற்றைய குழுக்களை நாம் ஒதுக்கவில்லை. அவர்களுடன் இப்போது பேசிப் பயன் ஏதும் இல்லை.

அவர்களுடன் பேச்சு நடத்தினால் மேற்கொண்டு நிலைமை தப்பாகும் நிலை கூட வரலாம்.

கேள்வி:- தப்பாக எப்படிப் போகும்?

பதில்:- அப்படிப் பேச்சு நடத்தினால் புலிப்படை கூறுவகற்த முரணாக அரசு செயற்படுவதாக புலிப்படையினர் நினைக்கக் கூடிய நிலை வரலாம்.

"செருப்புப் போட்டவர்களுக்குத்தான் தெரியும் செருப்பை எப்படிக் கழற்றுவது என்று"

நிரந்தரமாக அங்கு இருப்பவர்களுக்குத்தான் சமாதானத்தை உருவாக்குவதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று தெரியும்.

புலிகளுடன் அரசு பேசிக்கொண்டிருக்கும் போது இன்னொருவருடன் வெளியில் இருந்தும் பேசிக் கொண்டிருந்தால் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில அது முரண்பாட்டை ஏற்படுத்தி விடலாம்.

அமைதிப் பேச்சு நடத்தி முடிவுக்கு வந்தபிறகு அதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து மற்றைய தமிழ் குழுக்களை அழைத்துப் பேசுவதை நாம் ஆட்சேபிக்கவில்லை.

சமாதானத்துக்கு எந்த வழியை நாடுவது என்பது குறித்து அரசும், விடுதலைப் புலிகளும் மட்டுமே பேச முடியும் — என்றார். (உ-க)

## மீண்டும் பதவி ஏற்றார் சுரவீர

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பதவியில இருந்து ராஜினமாச் செய்திருந்த பேராசிரியர் சுரவீர மீண்டும் அப்பதவியை ஏற்றுள்ளார்.

புதிய அரசு பதவி ஏற்றபின் பல்கலைக்கழக மானில ஆணைக்குழுவின் நிர்வாகம் மாற்றியமைக்கப்பட்ட சமயம் புதிய தலைவராக பதவி ஏற்றிருந்த இவர் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் திடீரென தமது பதவியை ரஜினாமாச் செய்திருந்தார்.

## யாழ். மாவட்டத்----

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அடுத்தே அரசு இதற்கு இணங்கியுள்ளது என்றும் யாழ் அரச அதிபர் தெரிவித்தார்.

முன்னர் ஒரு கப்பலுக்கு மட்டுமே அரசாங்கம் கடபல் கட்டணத்தை தனது பொறுப்பில் ஏற்றுக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ 4-7)

## சந்திரிகாவின---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அது அவ்வாறு இல்லை அங்கு தாம் நல்ல முறையில் நடத்தப்பட்டதாகவும் "சண்டே ரைம்ஸ்" ஆசிரியர் கூறியிருக்கிறார்.

— இவ்வாறு ஜனாதிபதியின் செயலகம் ... தெரிவித்தார். (உ-க-6)

## உணவுச்---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

உரிமத்தைப் பெற்று வைத்திருக்க வேண்டும் என இச்சட்டம் வலியுறுத்துகிறது.

இத்தகைய தொழிலில் ஈடுபடுவோர் உரிமத்தைப்பெற தமது பகுதியில் உள்ள உள்ளுராட்சி மன்ற அலுவலகத்தில் ஐந்து ரூபா செலுத்தி இதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்திசெய்து, உரிய உரிமக் கட்டணத்துடன் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் அவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

மே முதலாம் திகதிக்குப் பின்னர் மேற்படி உரிமம் பெறாமல் உணவுத் தொழிலை நடத்தும் உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். மாநகரப்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றர்கள் 12 தொன், முதல் 10 தொன் வரை எடையுள்ளதால் அவற்றைக் கப்பலில் கொண்டு சென்று பருத்தித் துறையில் இறக்குவதில் கஷ்டங்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேண்டுமானால் 300 கே.வி வலுக்கொண்ட இரண்டு ஜெனரேற்றர்களை மட்டுமே கப்பலில் எடுத்துச் செல்ல முடியுமாம்.

யாழ். குடாநாட்டுக்கு இலகுவான போக்குவரத்துப் பாதை ஒன்று திறக்கப்படாததால் மாநகர சபைப் பகுதிக்கு மின்சாரம் வழங்கும் சிறிய திட்டத்தைக்கூட செயலாக்க முடியாமல் உள்ளது.

இத்தனைக்கும் இத்திட்டத்திற்கு உதவ பிரிட்டன் முன்வந்திருந்த போதிலும் எதுவும் செய்ய முடியவில்லை என்று விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பிந்திக் கிடைத்த தகவல்களின்படி 300 கே.வி ஜெனரேற்றர்கள் இரண்டும் பருத்தித்துறைக்கு அனுப்பப் படுவதாக் கொழும்புத் துறைமுகத்துக்கு நேற்று எடுத்துச் செல்லப்பட்டதாக அறியவந்தது. ]அ 4-7]

## அரசின்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கான தீர்வை அரசு காண வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர, முன்னாள் அமைச்சர் நந்தா மத்தியூ, ஐ.தே.க வின் எம்.பியான மனுவியாராட்சி, பொ.ஐ முன்னணியின் எம்.பிக்களான பீலிக்ஸ் பெரேரா, பிரேமச்சந்திர பாரத லக்ஷ்மன், சமய கலாசார அமைச்சர் லக்ஷ்மன் ஜயக்கொடி, தமிழர் கூட்டணி எம்.பியான அ. தங்கத்துரை, இ.தொ.காவின் எம்.பியான இராஜரத்தினம், அமைச்சர் அஷ்ரப் உட்பட பலர் சமாதான முயற்சிகளை வரவேற்று உரைநிகழ்த்தினர். (உ-3

## விடுதலைப்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லைப் புலிகள் கேட்டுக் கொண்டனர்—

உதயனில் வெளியான செய்தியில் இந்தக் கோரிக்கையை நாம் ஏற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது சரியானதல்ல—

ஆயினும், நோர்வேயிலிருந்து தமிழர்களைத் திருப்பி அனுப்புவது சம்பந்தமான விவகாரத்தில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை எமது அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்த உள்ளோம்— என்று அவர் தமது கடிதத்தில் விவரித்துள்ளார்.

நோர்வேயில் தஞ்சம்கோரி விண்ணப்பிப்பவர்களுக்கு அவர்களைப் பற்றிய தனிப்பட்ட தரவுகளை பரிசீலிப்பதன் அடிப்படையில் சர்வதேசப் பாதுகாப்புத் தேவைப்படுவோர் என்று கருதப்படுவோருக்கு வாசகால அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகிறது. இவ்வாறு வாசகால அனுமதிப் பத்திரம் பெறுவோரில் சர்வதேசப் பாதுகாப்புத் தேவைப்படும் இலங்கைத் தமிழர்களும் அடங்குவர் —

நோர்வேயில் தங்குவதற்கான வாசகால அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத இலங்கைத் தமிழர்களில சில வகையினரை அவர்களது நாட்டுக்குத் திருப்பி அனுப்புவது என்று 1994 மே மாதத்தில நோர்வே அரசாங்கம் முடிவு செய்தது.—

அந்த வகையில் ஒரு சில இலங்கைத் தமிழர்களே இதுவரை திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். 1995 பெப்ரவரி மாதத்துக்கு முன்னர் நான்கு அல்லது ஐந்து பேரே அவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டனர்—என்றும் திரு. நீர்பை தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# வடக்கே உணவுப் பொருள் எடுத்துவர புதிய நடைமுறை

## சந்திரானந்த டி சில்வா ஏற்பாடு

வடக்குக்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களை எடுத்துவர தற்சமயம் அமுலில் இருந்து வரும் நடைமுறையை மாற்றி புதிய நடைமுறையைக் கொண்டு வர பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரியவந்தது.

பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராகப் பதவி ஏற்றுள்ள சந்திரானந்த டி சில்வா இது தொடர்பாக நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரியவருகிறது.

இதுவரை காலமும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளராக இருந்த ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவின் கீழ் செயற்பட்டு வந்த பாதுகாப்பு இணைப்புக் குழுவே, வடக்குக்கு பொருள்கள் அனுப்புவது தொடர்பான பணிகளை மேற்கொண்டு வந்தது.

வடக்கே பொருள்கள் அனுப்புவது தொடர்பான நடைமுறைகளை சிவில் அதிகாரி மூலம் மேற்கொள்வது அல்லது —

புனர்வாழ்வு அமைச்சிடம் இந்த நடைமுறையை ஒப்படைப்பது — போன்ற ஏற்பாடுகள் குறித்து புதிய செயலாளர் சந்திரானந்த டி சில்வா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தற்போது ஆராய்ந்து வருவதாகத் தெரியவந்தது. (ஓ-3)

# பத்திரிகையாளர் நடத்திய கூட்டத்தில் குழப்பம்!

சுதந்திரப்பத்திரிகையாளர் இயக்கம் நேற்று முன் தினம் இரவு நுகேகொடையில் நடத்திய பொதுக் கூட்டத்தில் குழப்பம் நிலவியதாக தெரிவிக்கப்படுகிறது.

கூட்டத்தில் பலகுறுக்கீடுகள் இடம்பெற்றன என்று சொல்லப்படுகிறது.

பிரதம பேச்சாளர்கள் கூட்டத்தில் பேசுவதற்கு சந்தர்ப்பம்வழங்கப்படவில்லை. வேறு சிலர் இக்கூட்டத்தை சில அரசியல் கட்சிகளுக்கு எதிராக மாற்ற முயற்சித்தனர் என்று கூறப்படுகிறது

ஜே.வி.பி பற்றி "ராவய" செய்தி ஆசிரியர் நியூட்டன் செனவிரத்ன தெரிவித்த கருத்துகளுக்கு கூட்டத்தில் பங்குபற்றிய சிலர் ஆட்சேபம் தெரிவித்தனர்.

செனவிரத்ன தனது கூற்றுக்களை வாபஸ் வாங்க வேண்டும் என்று அவர்கள் கோரினர் கூட்டத்தைஒழுங்கு செய்தவர்கள் இதில் தலையிடாததைத் தொடர்ந்து, கூட்டத்தில் கலந்து காண்டவர்கள் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்தனர்.

நிலைமை மோசம் அடையவே சட்டம், ஒழுங்கைநிலை நாட்ட பொலிஸார் தலையிட வேண்டியதாயிற்று.

அழைக்கப்பட்டிருந்த பிரமுகர்கள் கூட்டத்தில் பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்படவில்லை என்று சுதந்திரப் பத்திரிகையாளர் இயக்கத்தைச் சேர்ந்த திரு. சுஜீவா திஸநாயக்கா தெரிவித்தார்.

சுதந்திர பத்திரிகையாளர் இயக்கத்துக்கு எதிரான அறிக்கை ஒன்றை தமது பத்திரிகை வெளியிடும் என "யுக்திய" ஆசிரியர் தெரிவித்தார். (ஐ-எ)

# 31ம் நாள் நினைவலைகள்

வடபிராந்திய உப்பள ஊழியர் சேவைநலச் சங்கத்தின் போஷகரும் பிராந்திய முகாமையாளருமான

திரு. தி. ஸ்ரீ இராமநாதன்

அவர்களின் தந்தையார்

## அமரர் பொ. தில்லையம்பலம்

அவர்களின்

மரணத்தையிட்டு 31 ஆம் நாளாகிய இன்று அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாக உறுப்பினர்கள்,
வ.பி உ.ஊ.சே.ந.சங்கம்,
மிருசுவில்.

[35359]

# கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

யாழ். இந்து மாணவனும் எமது வகுப்புத் தோழனுமாகிய செல்வன் ச. சிவசங்கரின் அன்புத் தாயார்

திருமதி
## அமிர்தவல்லி சங்கரப்பிள்ளை

அவர்கள் நேற்று (23-02-1995) இறைவனடி சேர்ந்ததையிட்டு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகிறோம்.

துயரில் தோயும்,
97 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்கள்

குறிப்பு:
97ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களைச்சீருடையில் இன்று (24.2.95) காலை 8.00 மணிக்கு கல்லூரிக்குச் சமுகமளிக்கும்படி வேண்டுகிறோம்.

(35357)

# கண்ணீர் அஞ்சலிகள்

எமது சக வகுப்பு மாணவியாகிய கௌரியின் தாயார்

## சங்கரப்பிள்ளை அமுதவல்லி

யின் அகால மரணத்தால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரத்தியேக வகுப்பு மாணவர்கள்
[கணிதம்]

அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

(35363)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். இந்துக்கல்லூரி கணிதப்பிரிவு [A/L 1997] மாணவன் ச. சிவசங்கரின் தாயார்

## திருமதி ச. அமுதவல்லி

யின் அகால மரணத்தினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தாத்தா அணியினர்

(35364)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org